பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 25 புதன்கிழமை (09-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:45

# நோர்வே ஏற்பாட்டில் இந்தியாவில் பேச்சு!

## உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்படமாட்டாது

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி விடுத்த வேண்டுகோளை அரசு நிராகரித்துவிட்டது.

ஏற்கனவே இரு தடவை இந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இனியும் தேர்தலை ஒத்திவைக்க முடியாது என்று அரசு பொ.ஐ.முன்னணிக்கு அறிவித்திருக்கிறது.

தமது ஆதரவாளர்கள் தொடர்ந்தும் தாக்கப்பட்டு வருகின்றனர். அதனால் இன்னொரு தேர்தலுக்கு முகம் கொடுப்பது கஷ்டமாக இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டியே தேர்தலை ஒத்திவைக்குமாறு பொ.ஐ.முன்னணி கோரி இருந்தது. (க)

## புலிகளின் விருப்பம் இது

லண்டன்,ஜனவரி9

**இலங்கை அரசுடனான உத்தேச சமாதானப் பேச்சுக்களை நோர்வேயின் ஏற்பாட்டுடன் தென்னிந்திய நகரம் ஒன்றில் நடத்துவதை விடுதலைப் புலிகள் விரும்புகின்றனர் என நோர்வேத் தரப்புக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது.**

**விடுதலைப் புலிகளுக்கு மிக நெருக்கமான வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றன.**

**விடுதலைப் புலிகளின் இந்த விருப்பம் பற்றிய தகவல் அடுத்து வரும் நாள்களில் இந்திய, இலங்கைத் தரப்புகளுக்கு நோர்வேப் பிரதிநிதிகளால் தெரியப்படுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.**

தென்னிந்திய நகரமான சென்னையில் தங்கியிருந்து பேச்சு நடவடிக்கைகளை முன்னெடுக்க விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விரும்புகின்றார் என்ற தகவலை கடந்த ஞாயிறன்று 'உதயன்' முதன்முதலாக வெளிப்படுத்தியது தெரிந்ததே.

அரசு - புலிகள் எதிர்காலத்தில் பேச்சு நடத்துவதற்கான இடமாக

(11ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்தாவது விமான சேவை இந்து விவகார அமைச்சினால்!

### நாளைமுதல் நடத்தப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.9

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் நாளைமுதல் தினசரி ஐந்து தடவைகள் விமானசேவை நடைபெறும்.

இந்த ஐந்தாவது சேவையை ஹெலிரூர்ஸ் நிறுவனத்துடன் சேர்ந்து இந்து சமய விவகார அமைச்சு நடத்தும் என்று அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

"தினசரி இரவு 9 மணிக்கு கொழும்பிலிருந்தும் 10 மணிக்கு பலாலியிலிருந்தும் கடைசி சேவை நடத்தப்படும்.

"இந்தச் சேவையை இந்து சமய விவகார அமைச்சே நடத்தும். இச் சேவையில் பயணம் செய்வோருக்கான பயணச்சீட்டுகள் கொழும்பில் பம்பலப்பிட்டியிலுள்ள அமைச்சு அலுவலகத்திலும், யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகக் காரியாலயத்திலும் வைத்து வழங்கப்படும்.

"அமைச்சின் மூலம் நடத்தப்படும் கடைசிச் சேவையில் யாழ்ப்பா

(11ஆம் பக்கம் பார்க்க)

## கருத்துக்கூற இந்தியா மறுப்பு

புதுடில்லி,ஜன.9

இலங்கை அரசு - விடுதலைப் புலிகள் இடையேயான உத்தேச சமாதானப் பேச்சுக்களை இந்தியாவில் நடத்தலாம் என்று புலிகள் தரப்பில் ஆலோசனை கூறப்பட்டிருப்பதாக வெளியான செய்திகள் குறித்து இப்போது கருத்துக் கூற இந்தியா மறுத்துவிட்டது.

"இந்தியாவில் பேச்சு நடத்தலாம் எனப் புலிகள் கோரியிருப்பதாக வெளியான செய்திகள் குறித்து என்ன கூறுகின்றீர்கள்?" - என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரான பெண்மணியிடம் நேற்று மாலை வினா தொடுக்கப்பட்டது.

"அத்தகைய பத்திரிகைச செய்திகள் குறித்து கருத்து ஏதும் கூற விரும்பவில்லை" என்றார் அவர்.

"இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புதிய அரசு ஆரம்பித்திருக்கும் சமாதான முயற்சிகளுக்கு இந்திய அரசு முழு ஆதரவு வழங்குகின்றது" - என்றும் அவர் சொன்னார். (உ)

## யுத்தநிறுத்த உடன்பாடு
## புலிகளின் ஆலோசனைகள் குறித்து இன்று அரசுத் தரப்புக்கு விளக்கம்

### நோர்வேத் தூதுக்குழுவினர் அளிப்பர்

கொழும்பு,ஜன.9

அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்கான முதலாவது கட்ட முன்னேற்பாடுகளைச் செய்யும் நோக்கத்தோடு இந்தச் சமாதானப் பேச்சுத் தொடர்பான ஏற்பாட்டாளர் பணியை மேற்கொள்ளும் நோர்வேத் தூதுக் குழு இன்று கொழும்பு வருகின்றது.

அரசும் விடுதலைப் புலிகளும் தனித்தனியாகப் பிரகடனப்படுத்தியுள்ள மோதல் தவிர்ப்பு மற்றும் யுத்த நிறுத்த அறிவிப்புகளை, முறையான - இருதரப்பிலும் இணக்கமான - ஒரு புரிந்துணர்வு அடிப்படையிலான - யுத்த நிறுத்தமாக மாற்றி, அது தொடர்பாக இரு தரப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்விக்கும் முயற்சியில் இம்முறை

(11ஆம் பக்கம் பார்க்க)

## சக்கர நாற்காலியில் நேற்று சபைக்கு வந்தார் சிவசிதம்பரம்

### அதில் அமர்ந்தபடியே சத்தியப்பிரமாணம்

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம்.சிவசிதம்பரம் நேற்றுச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். சக்கர நாற்காலியில் நாடாளுமன்றம் வந்த அவர் அதில் இருந்தபடியே பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மஹிபால ஹேரத, ஜே.வி.பியைச் சேர்ந்த விமல் ரத்நாயக்க ஆகியோரும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இதேவேளை -

முஸ்லிம் காங்கிரஸ் தேசியப்பட்டியல் எம்.பியாக எம்.எச்.எம்.ஸல்மான் நேற்றுக்காலை சத்தியப்பிரமாணம் செய்தார். நண்பகல் அவர் தமது பதவியை ராஜினாமாச் செய்தார். வேறு ஒருவருக்கு இடமளிப்பதற்காக அவா பதவி துறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## வன்னிக்கான உணவு விநியோகம்; அமைச்சர் - அதிகாரி 'சொற்போர்'!

### நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் வெடித்தது

கொழும்பு,ஜன.9

வன்னிக்கு உணவுப் பொருள்களை அனுப்புவது குறித்து விளக்குவதற்காக புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவால் நேற்றுக் காலை கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் வைத்து அவருக்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஸ்ரீபதி சூரியாராச்சிக்கும் இடையில் 'சொற்போர்' மூண்டது.

இந்தச் செய்தியாளர் மாநாட்டுக்கு வரும்படி விடுக்கப்பட்ட அழைப்பை சூரியாராச்சி நிராகரித்திருந்தார். ஜனாதிபதியின் செயலாளரின் தலையீட்டை அடுத்து செய்தியாளர் மாநாட்டுக்கு வந்தார் சூரியாராச்சி.

(11ஆம் பக்கம் பார்க்க)




யாழ்ப்பாணம் வந்துள்ள இலங்கை வர்த்தக, கைத்தொழில் சபைகளின் சம்மேளனப் பிரதிநிதிகள் பஸ்தியன் ஹோட்டலில் நேற்றுக் கூட்டம் ஒன்றை நடத்தியபோது எடுக்கப்பட்ட படம். யாழ்.வர்த்தக, கைத்தொழில் சபைத் தலைவர் கே.பூரணச்சந்திரன் உரையாற்றுகின்றார்.

படத்தில் இடமிருந்து வலமாக யாழ்.ஈரோவில் நிறுவன இயக்குநர் எஸ்.இராமதாஸ், ஸ்ரீலங்கா வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் சிரேஷ்ட உறுப்பினர் திஸ்ஸ ஜயவீர, உறுப்பினர் நளின் ஆட்டிகல, சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் கிரான்வில் பெரேரா, சம்மேளனத்தின் தலைவர் மக்கி ஹசிம், சிரேஷ்ட உதவித் தலைவர் நிகால அபேசேகர, பொதுச்செயலாளர் சமந்த அபயவிக்கிரம, யாழ்.தொழிற்துறை சம்மேளனத்தின் பிரதிநிதி வி.முத்துக்குமாரசாமி ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

புலிகள் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியதாக

# கைதாகியுள்ள படையினருக்கு ஆதரவாக குரல் எழுப்பும் சிஹல உறுமய கட்சி!

## எதிராகச் செயற்படுவோர் மீது விசாரணை நடத்தவும் கோருகிறது

கொழும்பு,ஜன.9

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவித் தாககுதல் நடத்தி வந்ததாகக் கூறப்படும் இராணுவப் பிரிவுக்கு ஆதரவாக சிஹல உறுமய குரல் எழுப்பியுள்ளது. இந்தப் பிரிவைச் சேர்ந்த படையினர் சிலர் கைது செய்யப்படுவதற்குக் காரணமானவர்கள் குறித்தும் இவர்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி, தவறு செய்ததாக இனங்காணப்படுபவர்கள் சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் - என றும் கோருகின்றது சிஹல உறுமய.

இது தொடர்பாக சிஹல உறுமய விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஊடுருவல் செய்து தாக்குதல் நடத்தும் இராணுவப் பிரிவு ஒன்று இருப்பது பற்றி பலர் அறிந்துள்ளனர். இவ்விசேட பிரிவின் பல துணிகரத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் பலரைக் கொன்றிருக்கின்றனர்.

ஆயினும் இராணுவத்திற்கும், புதிய அரசாங்கத்தின் தயவைப் பெற முயற்சிக்கும் ஒரு சில பொலீஸ் அதிகாரிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள தகராறு காரணமாக இவ்விசேட குழுவினரின் செயல்கள் வெளியாகியுள்ளன. உள்துறை அமைச்சர் இவ்விடயங்களை ஊடகங்களுக்கு தெரிவித்ததன் மூலம் பொறுப்பற்ற முறையில் நடந்துள்ளார்.

பிரதமரைக் கொலை செய்யும் சதித் திட்டமொன்று இருந்திருப்பின் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அது பற்றி எவராலும் முறைப்பாடு செய்திருக்க முடியாது. ஆனால் விடயத்தின் தாற்பரியத்தை உணர்ந்து விசாரணைகளையும் இரகசியமான முறையில் நடத்தியிருந்தல் வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சரும், முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான அவரது செயலாளரும், இராணுவத்தின் சில மூத்த அதிகாரிகளும் நாட்டின் நலன்கருதி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

எனவே இது தொடர்பில் பக்கசார்பற்ற ஒரு விசாரணையை நடத்தி, தவறுசெய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்தல் வேண்டும் -

அத்துருகிரியவில் நடைபெற்றது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் எழாமல் முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும். வீரம் மிக்க படையினரின் மனவுறுதி குலையாமல் பாதுகாக்கப்பட வேண்டும் - என்றுள்ளது.(க-3)

# பிரதி சபாநாயகர் பதவி பேரியல் அஷ்ரப்புக்கு!



கொழும்பு,ஜன.9

தேசிய ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான பேரியல் அஷ்ரப் பிரதி சபாநாயகர் பதவிக்கான வேட்பாளராக பொ.ஐ. முன்னணியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் பதவிக்கு, எதிர்க்கட்சி தமது தரப்பில் எவரையாவது நியமிக்கலாம் என்று அரசு விடுத்த கோரிக்கையை தாங்கள் அடியோடு நிராகரிப்பதாக முன்னர் பொ.ஐ.முன்னணி அறிவித்திருந்தது.

ஆனால் தற்போது அந்த அறிவிப்பை ஒதுக்கித் தள்ளிவிட்டு, பேரியல் அஷ்ரப்பை பிரதி சபாநாயகர் பதவிக்கு சிபாரிசு செய்திருக்கிறது பொ.ஐ. முன்னணி.

இந்தப் பதவிக்கு எதிர்க்கட்சித் தரப்பில் எவரும் நிறுத்தப்படாத பட்சத்தில் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருக்கு அதனை வழங்கிவிட அரச தரப்பில் முடிவு எடுக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது.

அதை அடுத்தே இந்தப் பதவிக்கு சுதந்திரக் கட்சி, அனுர யாப்பாவின் பெயரை சிபாரிசு செய்திருந்தபோதும் அதனை புறம்தள்ளிவிட்டு பேரியல் அஷ்ரப்புக்கு பிரதி சபாநாயகர் பதவியை வழங்க முடிவு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. (க-6-ரி)

# இந்து கலாசார அமைச்சு அலுவலகம் செயலகத்தில் விரைவில் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.செயலகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இந்து கலாசார அமைச்சு அலுவலகத்திற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளன. விரைவில் அமைச்சு அலுவலகம் இயங்கத் தொடங்கும்.

கடந்த சில தினங்களாக இந்த அலுவலகத்திற்கான மின் இணைப்பு, தொலைபேசி இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அந்தப் பணிகள் யாவும் பூர்த்தியடைந்து அலுவலகம் இயங்கத் தயாரான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சு அலுவலகத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்று யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அலுவலகம் ஒன்று யாழ்.செயலகத்தில் இயங்கி வந்தமை தெரிந்ததே. அந்த அலுவலகமே தற்போது அமைச்சு அலுவலகமாக மாற்றப்பட்டுள்ளது.(ம-8)

# திக்கம் வடிசாலை மோசடிகள் பற்றி விசாரணை நடத்த மூவர் குழு நியமனம்

## பனை அபிவிருத்திச்சபை புதிய தலைவர் தகவல்



யாழ்ப்பாணம்,ஜன.9

திக்கம் வடிசாலையில் கடந்த காலங்களில் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இவை தொடர்பாக விசாரணைகளை நடத்த மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. மோசடிகளுக்குப் பொறுப்பானவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பனை அபிவிருத்திச்சபைத் தலைவராகப் பதவியேற்றுள்ள பொ.சிவபாதம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக கடந்த புதன்கிழமை பதவியேற்ற அவர் சபையை மறுசீரமைக்கத் திட்டமிட்டுள்ளார்.

இன்று யாழ்ப்பாணம் வரும் அவர் புதிய திட்டங்கள் குறித்து ஆராய்வார். பனம் தொழில் செய்யும் சமூகம் கஷ்டப்பட்டு தமது தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களின் உழைப்பை எவரும் சுரண்ட இடமளிக்கக்கூடாது. அவர்களின் மேம்பாட்டுக்கு புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று புதிய தலைவர் மேலும் கூறினார். (க-3)

# தகுதியில்லாத வைத்தியர்கள் நோயாளருக்கு ஆங்கில மருந்து வழங்குவதை தடுக்க வேண்டும்

## யாழ்.வைத்தியர் சங்கத்தினர் கோரிக்கை

வலிகாமம்தெற்கு,ஜன.9

குடாநாட்டில், தகுதியில்லாத வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்குவதைத் தடுப்பதற்கு வேண்டிய உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ்ப்பாணம் வைத்தியர் சங்கத்தினர், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண வைத்திய சங்கத்தின் சார்பாக அதன் செயலாளர் வைத்திய கலாநிதி எம்.எஸ்.முகுந்தன் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

தகுதியில்லாத, போதிய பயிற்சியற்ற வைத்தியர்கள் ஆங்கில மருந்து வகைகளை நோயாளர்களுக்கு வழங்குவதால் ஏற்படக் கூடிய பாதிப்புகளையும், விபரீத விளைவுகளையும் சுட்டிக்காட்டியுள்ள வைத்தியர் சங்கத்தினர், நோயாளர்களைப் பாதுகாக்க ஆங்கில மருந்து விநியோகத்தை இவர்களிடமிருந்து தடுத்து நிறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

- தவறான முறையில் வழங்கப்படும் மருந்து வகைகளால் சாதாரணமான நோயாளர்களை கடும் நோயாளர்களாக மாற்றுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.
- தவறான மருந்து வகைகளைக் கொடுத்து, வில்லைகளுக்கு எதிர்ப்புத் தன்மையைக் கிருமிகள் பெறுவதால மருந்துக்கு நோய்கள் கட்டுப்பட முடியாதவாறான நிலை தோற்றுவிக்கப்படுகிறது.
- மருந்துச் சிட்டைகளில் தவறான மருந்து வகைகள் எழுதிக் கொடுத்து விடுவதால், நோய்கள் அடக்கப்பட்டு, வேறு நோய்களுக்கான குணங்குறிகளை தோற்றுவிக்கின்றன.

இதுபோன்ற பல காரணங்களைச் சுட்டிக் காட்டி தகுதியில்லாத வைத்தியர்கள் ஆங்கில மருந்து வகைகளை நோயாளர்களுக்கு வழங்குவதை உடன் தடுத்து நிறுத்துமாறு வைத்தியர் சங்கத்தினர் தமது கோரிக்கையில் வலியுறுத்தியுள்ளனர். (க-152)

வர்த்தக சம்மேளன பிரதிநிதிகள் யாழ்.விஜயம்

# குடாநாட்டில் தொழிலகங்கள் புத்துயிர் பெற உதவுவோம்

## நேற்று நடந்த கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம்.ஜன.9

இலங்கை வர்த்தக கைத்தொழில் சபைகளின் சம்மேளனப் பிரதிநிதிகளின் யாழ்.விஜயம் நல்லெண்ணப் பாலமாக அமையும் அதேசமயம் குடாநாட்டில் நொடிந்து போயுள்ள தொழிலகங்கள் மீண்டும் புத்துயிர் பெற நாம் சகல வழிகளிலும் உதவுவோம்.

சம்மேளனத்தின் தலைவர் மக்கி ஹசீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள சம்மேளனத்தின் பிரதிநிதிகள் பஸ்தியன் ஹோட்டலில் நடத்திய கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

யாழ்.சம்மேளனத் தலைவர் எஸ். பூரணச்சந்திரன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகள் முதற்றடவையாக யாழ்ப்பாணம் வந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் இயங்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் தெற்கில் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கும் இடையில் நல்லெண்ணப் பாலம் ஒன்று உருவாக எமது விஜயம் உதவும்.

குடாநாட்டில் தொழில் நிறுவனங்கள் பெரும் இக்கட்டு நிலையில் இருப்பதாக அறிந்தோம் அவற்றுக்கு புத்துயிர் அளிக்க உதவவிருக்கின்றோம்.

கடந்த காலங்களில் அந்த நிறுவனங்கள் பெற்றிருந்த கடன்களை மீளச்செலுத்தும் கால எல்லையை அதிகரிக்க சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடவிருக்கின்றோம்.

வங்கிகள் வழங்கும் கடன்களை வசூலிக்கும்போது தளநிலை குறித்துச் சிந்திக்க வேண்டும். சாதகமான சூழ்நிலையை மட்டும் கருத்தில் கொள்ளாது, நெருக்கடியான சூழ்நிலையையும் கருத்தில் கொள்ளவேண்டும் - என்றார்.

வர்த்தக சம்மேளனக் குழுவின் யாழ்.வருகையை நினைவு கூர்ந்து நினைவுச் சின்னம் ஒன்றை யாழ்ப்பாணச் சம்மேளனத் தலைவர் எஸ்.பூரணச்சந்திரனிடம் ஹசீம் கையளித்தார். (க-3-180)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.பல்கலைக்கழக முல்லைத் தீவு மாவட்ட ஒன்றியத்தின் பொதுக் கூட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு வணிகத் துறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (க-3)

# கொழும்புத்துறை சென்.ஜோசப் பழைய இடத்தில்!

குருநகர்,ஜன.9

கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயம் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை எம்.யேசுரட்ணம், யாழ்.கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜகோபால், கொழும்புத்துறைக்கான இராணுவக் கட்டளை அதிகாரி எஸ். பெரேரா ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

அன்று காலை 9 மணிக்கு கொழும்புத்துறை சூசையப்பர் ஆலயத்தில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை எம்.யேசுரட்ணத்தால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு இடம்பெயர்வின் பின்னர் இப்பாடசாலை வகுப்புகள் புனித பத்திரிசியார் கல்லூரியில நடைபெற்றுவந்தன.

இப்பாடசாலைக்குரிய தளபாடங்கள் யாவும் அங்கிருந்து மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் மஞானப்பிரகாசம் தெரிவித்தார். (க-51)

சர்ச்சைக்குரிய கட்டுரையால்

# 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையின் 90 ஆயிரம் பிரதிகள் அழிப்பு!

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஞாயிறு பதிப்பான 'சண்டே ஒப்சேவர்' ஆங்கிலப் பத்திரிகையின் 90 ஆயிரம் பிரதிகள் அழிக்கப்பட்டன.

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிக்கரைப் பத்திரிகையான 'சண்டே ஒப்சேவர்' வார இதழில் புத்தரின் புனித தந்தம் குறித்து அவதூறு ஏற்படுத்தும் வகையில் கட்டுரை ஒன்று பிரசுரமாகி இருந்தது. இந்தப் பத்திரிகை வெளிவந்திருந்தால் பெரும் அரசியல் குழப்பம், சர்ச்சை ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டது.

கண்டியில் தலதாமாளிகையில் உள்ள புத்தரின் புனித தந்தம் (பல்) போலியானது. அது யானையின் தந்தத்தால் செய்யப்பட்டது. இவ்வாறு அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கட்டுரையை வரைந்தவர் ஓர் இஸ்லாமியர்.

இந்தக் கட்டுரை இடம்பெற்றிருந்ததாலேயே அந்த 90 ஆயிரம் பிரதிகளும் விநியோகத்துக்கு முன்னர் அழிக்கப்பட்டன.

அந்தக் கட்டுரையைத் தவிர்த்து புதிதாக பத்திரிகை அச்சிடப்பட்டு பின்னர் விநியோகிக்கப்பட்டது.

புதிதாக பதவியேற்றுள்ள இஸ்லாமியரான வெகுஜனத் தொடர்பு சாதன அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு - நெருக்கடியை - சிக்கலை - ஏற்படுத்தும் நோக்குடன்தான் இந்தக் கட்டுரை அந்த வாரஇதழில் சேர்க்கப்பட்டது என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

இது குறித்து உடனடி விசாரணை நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை -

புத்தரின் புனித தந்தத்தை அவதூறு செய்யும் விதமான இந்தக் கட்டுரை குறித்து கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள அஸ்கிரிய மகாநாயக்க தேரர், இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிங்களவரின் இறைமையை வெளிப்படுத்தும் குறியீடான புனித தந்தத்தை பாதுகாக்க முற்காலத்தில் சிங்கள பௌத்த அரசர்கள் தமது உயிரைப் பணயம் வைத்து போராடியுள்ளார்கள் என்றும் தேரர் குறிப்பிட்டிருக்கிறார். (க-6-ரி)

# வடக்கு - கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட முடிவு!

கொழும்பு,ஜன.9

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு - கிழக்கில் தனித்துப் போட்டியிட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

அக்கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் ஏ.ஜே.எம்.முஸம்மில் இத்தகவலை வெளியிட்டார்.

மேல்மாகாணத்தில் ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிட முடிவு செய்துள்ளோம் என்றும் -

இது தொடர்பாக ஐ.தே.கட்சியுடன் பேச்சு நடத்தி இறுதித் தீர்மானம் எடுக்க இருக்கின்றோம் என்றும் - அவர் தெரிவித்தார்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம் என்றும -

இதற்கென தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் - அவர் சொன்னார். (க-3)

# வடமராட்சி கிழக்கில் இம்முறை 280 ஹெக்டயர் நெற்செய்கை

வடமராட்சி கிழக்கில் கடந்த பெரும்போகத்தின் போது 280 ஹெக்டயர் நிலத்தில் நெற் பயிர்ச்செய்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் நூற்றுக் கணக்கான ஹெக்டயர் நிலங்கள் போர்ச்சூழல் காரணமாக நெற்பயிர்ச் செய்கை இடம்பெறவில்லை எனினும் அம்பன், குடத்தனை ஆகிய இடங்களில் மிகக்கூடுதலான நிலங்கள் நெற்பயிர்ச் செய்கை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டில் ஏனைய இடங்களில் நெற்பயிருக்கு பாதிப்பினை ஏற்படுத்திய மடிச்சுக்கட்டி, இலைச் சுருட்டி போன்ற நோய்த்தாக்கங்கள் வடமராட்சி கிழக்கில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்று விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (க-182)

# ஆப்கானில் புதிய தாக்குதல்களை அமெரிக்க வான்படை ஆரம்பித்தது!

காபூல்,ஜன.9

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதி நகரான கோஸ்டை சுற்றி அமைந்துள்ள அல்கெய்டா மறைவிடங்கள் என்று சந்தேகப்படும் இடங்கள் மீதும், முந்தைய தலிபான் நிலைகள் மீதும், அமெரிக்க விமானங்கள் தொடர்ந்து குண்டுவீசித் தாக்கி வருகின்றன.

பாகிஸ்தானுடனான எல்லைக்கு மிகச் சமீபமாக அமெரிக்க விமானங்கள் வீசிய குண்டுகள் வீழ்ந்து வெடித்துள்ளதாக பாகிஸ்தானிய எல்லைப்புறக் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

கோஸ்ட் நகரம் அருகே உள்ள தவான் பிரதேசத்தில் 6 அமெரிக்க ஹெலிகொப்டர்கள் தரையிறங்கியிருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இந்தப் பகுதியில் இருந்த முன்னாள் தலிபான் தளபதி ஜலாலுதீன் ஹக்கானிக்கு விசுவாசமான தலிபான் போராளிகளை அமெரிக்கப் படையினர் பிடிக்க முயற்சிப்பதாக பாகிஸ்தானில் இருந்து செயற்படும் இஸ்லாமிய செய்தி நிறுவனம் தெரிவித்தது.

ஜலாலாபாத் நகருக்குத் தெற்காக கடந்த சனிக்கிழமை தாக்குதலை தொடங்கிய அமெரிக்கப் படையினர், கிழக்கு ஆப்கான்மீது புதிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர்.

ஆயினும் அல்கெய்டா தலைவர் ஒஸாமா பின்லேடனோ, தலிபான் தலைவர் முல்லா முஹமட் ஒமரோ எங்கிருக்கிறார்கள் என்ற சிறு அறிகுறி கூட இதுவரை அமெரிக்கப் படையினருக்குத் தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)



ஆப்கானிஸ்தானில் குளிர் காயும் அமெரிக்க வீரர்கள்

# முக்கிய தலிபான் தலைவர் தெற்கு கந்தகாரில் கைது!

காபூல்,ஜன.9

தலிபான்களின் பிரதான தளபதிகளில் ஒருவரைப் பிடித்து அமெரிக்கப் படையினரிடம் தாம் ஒப்படைத்ததாக ஆப்கான் பழங்குடி இனத் தலைவர் நேற்று தெரிவித்தார்.

தெற்கு கந்தகாரில் தலிபான்களின் தகவல் துறைத் தலைவரும், சிரேஷ்ட பேச்சாளர்களில் ஒருவருமான அப்துல் ஹையீ மொட்மய்ன் திங்கட்கிழமை பிடிபட்டதாகவும் - பின்னர் அவர் அமெரிக்கப் படையினரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டதாகவும் -

ஆப்கானின் இடைக்கால அரசுக்கு விசுவாசமான பழங்குடி இனத்தின் தலைவர் கட்படா மொஹமட் கூறியுள்ளார்.

தலிபான் தலைவர் முல்லா முஹமட் ஒமரைத் தேடுவதில் மொட்மய்ன் உதவக்கூடும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (ஒ)

# தனது முன்னாள் ஐ.நா.தூதரை தேடுகிறது பொஸ்னிய அரசு

## பல லட்சம் டொலரை சுருட்டியவராம்

சரஜீவோ,ஜன.9

ஐ.நாவுக்கான முன்னாள் பொஸ்னியத் தூதர் மொஹமட் சசீர்பே எங்கிருந்தாலும் அவரைப் பணமோசடிக் குற்றத்துக்காகக் கைது செய்யும்படி இன்ரர்போலிடம் பொஸ்னிய அரசு கோரியுள்ளது.

சுமார் 6 லட்சம் அமெரிக்க டொலர்கள் அரசுப் பணத்தை சசீர்பே தனது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தியதாகச் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

1992-96 காலப் பகுதியில் பொஸ்னிய யுத்தம் நடந்தபோது, சசீர்பே பொஸ்னிய ஐ.நா.தூதராகப் பணியாற்றினார். 1992-2000 காலப்பகுதியில் ஐ.நாவுக்கான தூதராக மீண்டும் அவர் இருந்தார்.

இந்தக் காலப்பகுதிகளில் பொஸனியாவுக்கான, ஐ.நா.திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் சுமார் 6 லட்சம் டொலர்களைச் மோசடி செய்ததாக சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து பொஸ்னிய அரசு சரஜீவோ நகர நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சசீர்பேக்கு உத்தரவிட்டது.

ஆனால் இதனை ஏற்கமறுத்த சசீர்பே காணாமறபோனதாகக் கூறப்படும் பணத்துக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று தெரிவித்துவிட்டார். இதனால் சசீர்பேயைக் கைதுசெய்ய இன்ரர்போலின் உதவி நாடப்பட்டுள்ளது.

# பயங்கரவாத எதிர்ப்புப் போரில் மனித உரிமையைப் பேணவேண்டும்

## அமெரிக்க அமைப்பு வலியுறுத்து

நியூயோர்க்,ஜன.9

'சங்காய்' ஒத்துழைப்பு அமைப்பு உருவாக்கும் பயங்கரவாத எதிர்ப்புத் திட்டங்களில் மனித உரிமைகள் பேணப்படுவதற்கு முக்கிய இடம் அளிக்க வேண்டும்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் 'ஹியூமன் ரைட்ஸ் வாச்' என்ற மனித உரிமை அமைப்பு இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

'சங்காய்' ஒத்துழைப்பு அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு இந்த அமைப்பு அனுப்பியுள்ள கடிதங்களில் இந்த வேண்டுகோள் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரைப் பயன்படுத்தி அரசியல் அல்லது மதம் சார்ந்த குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை நியாயப்படுத்தக் கூடாது என்றும் மனித உரிமை அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்குடன் 6 மாதங்களின் முன்னர் 'சங்காய்' ஒத்துழைப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

சீனா, ரஷ்யா உட்பட ஆறு மத்திய ஆசிய நாடுகள் அங்கம் வகிக்கும் மேற்படி அமைப்பின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் கடந்த திங்கட்கிழமை சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் ஆரம்பமாகியுள்ளது. (ஒ-4-ரி)

### வெறுப்புக்குரிய மனிதராக பின்லேடன் தெரிவு

லண்டன்.ஜன.9

உலக மக்களால் மிகவும் வெறுக்கப்பட்ட ஒரு மனிதராக ஒஸாமா பின்லேடன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதில் இரண்டாவது இடம் ஹிட்லருக்கும் மூன்றாவது இடம் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கும் கிடைத்துள்ளது.

லண்டனில் உள்ள மெடம் துஷாட் மெழுகு பொம்மை அருங்காட்சியகத்துக்கு விஜயம் செய்த 1500 பேரிடம் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பிலிருந்தே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

### ஆப்கானில் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர்

தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் ஆப்கானிஸ்தானுக்குச் சென்ற முதல் உலகத் தலைவர் என்ற பெயரை பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் பெற்றார்.

ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் செய்த அவர் இடைக்காலப் பிரதமர் ஹமீட் கர்சே, அமைதிப் படையில் உள்ள பிரிட்டிஷ் வீரர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். (ஒ)

### ஆப்கானில் 100 கிராமவாசிகள் உயிரிழப்பு!

காபூல்,ஜன.9

ஆப்கானின் கிழக்கு காஜஸ் நகரத்தில் அமெரிக்கப் போர் விமானங்கள் இலக்குத் தவறி வீசிய குண்டுகளால் சுமார் நூறு கிராமவாசிகள் கொல்லப்பட்டனர்.

இத்தகைய கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று ஆப்கான் பழங்குடித்தலைவர்கள் கோரி உள்ளனர்.

# சியாராலியோன் நாட்டில் ஆயுதக்களைவு முடிந்தது

## ஐ.நா. அமைதிப்படை தெரிவிப்பு

பிரீடவுண்,ஜன.9

சியாராலியோனில் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்த தீவிரவாதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையும் பணி முடிவடைந்துவிட்டதாக அங்குள்ள ஐ.நா. அமைதிப் படை தெரிவித்துள்ளது.

சுமார் 42ஆயிரம் போராளிகள் தமது ஆயுதங்களை ஒப்படைத்துள்ளதாகவும் -

ஆயினும் நாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள சில தீவிரவாதிகள் மட்டும் ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்து தாக்குதல்களில் ஈடுபடுவதாகவும் -

ஐ.நா. அமைதிப்படையின் சிறப்புப் பிரதிநிதி ஓலோஜெமி அடெனிஜி கூறினார்.

ஆயினும் கடந்த பத்து ஆண்டுகளாக சியாராலியோனை இரத்தக் களரியாக்கிய உள்நாட்டுப்போரை முடிவுக்குக் கொண்டுவரும் அளவுக்கு தமது பணி வெற்றியளித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்துவிட்ட தீவிரவாதிகள் வைரச் சுரங்கங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

உலகில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அமைதிப்படை நடவடிக்கைகளில் பெரியதும், அதிக உயிர் மற்றும் பொருள் இழப்புக்களைக் கொண்டதுமான சியாராலியோனில் ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கை கருதப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ)



**ஆபிரிக்க நாடான சியாராலியோனில் பத்தாண்டு கால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவந்த ஐ.நா. அங்கு தனது அமைதிப்படையயை கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தியுள்ளது.**

**சியாராலியோனில் தீவிரவாதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையும் பணியில் ஈடுபட்டுள்ள ஐ.நா. அமைதிப் படையினரையும் அவர்களிடம் ஆயுதங்களை ஒப்படைத்த தீவிரவாதி ஒருவரையும் படத்தில் காணலாம்.**

# கடும் மழையின் மத்தியிலும் சிட்னியில் காட்டுத்தீ அச்சம்!

சிட்னி.ஜன.9

கடந்த சில நாள்களாக மழை பெய்தபோதும் சிட்னி நகரைச் சூழ்ந்த காட்டுத்தீ அபாயம் முற்றாக நீங்கவில்லை.

தெற்கு ஆஸ்திரேலியப் பகுதியில் கடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று மூண்ட காட்டுத் தீ, சிட்னி நகருக்கும் பரவி பல வீடுகளை எரித்தது.



சிட்னி மழையில் செல்பவர்கள் | காட்டுத் தீயை அணைப்பவர்

அப்பகுதியில் மழை பெய்தபோதும் காட்டுத்தீ வேகம் குறையாமல் மேலும் பரவி வருகிறது.

இதனையடுத்து புறநகர்ப் பகுதிகளில் வசிப்பவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்துவதில் அதிகாரிகள் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் அங்கு விடுமுறையைக் கழிக்கத் திரண்டுள்ளவர்கள் வெளியேற மறுப்பதால் அதிகாரிகள் சிரமத்தை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# புதிய பொருளாதாரத் திட்டம் ஆர்ஜென்ரீனாவில் அறிமுகம்

புவனர்ஸ்அயர்ஸ்,ஜன.9

நாட்டில் நிலவும் கடும் பொருளாதார நிதி நெருக்கடியைச் சமாளிக்க புதிய பொருளாதாரத் திட்டமொன்றை ஆர்ஜென்ரீனா அரசு நேற்றுமுன்தினம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதன்படி, ஆர்ஜென்ரீனாவின் 'பேசோ' நாணயத்தின் மதிப்பு சுமார் 30 வீதம் குறைக்கப்பட்டுள்ளது.

10 ஆண்டு காலமாக அமெரிக்க டொலருக்குச் சமமாக பேசோ இருந்து வந்தது. இது இப்போது முடிவுக்கு வந்துள்ளது.

புதிய சிக்கன நடவடிக்கைகள் பற்றிய நிதி நிலை அறிக்கையை ஆர்ஜென்ரீன பொருளாதார அமைச்சா அடுத்த மாதம் வெளியிடுவார் என்று கூறப்படுகிறது.

புதிய பொருளாதாரக் கொள்கை நம்பிக்கையளிப்பதாக வர்த்தகப் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆர்ஜென்ரீன மக்கள் தமது வங்கிக் கணக்குகளில் இருந்து மீளப்பெற அனுமதிக்கப்படும் பணத்தின் அளவை அதிகரிக்க இருப்பதாக அரசு தெரிவித்தது. தற்போது ஆயிரம் பேசோவாக உள்ள இந்த அளவு ஆயிரத்து 500 ஆக உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பலகோடி டொலர்கள் வெளிநாட்டு கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாது தவிக்கும் ஆர்ஜென்ரீனாவில் கடந்த மாதம் மக்கள் கிளர்ச்சி வெடித்து அதிபர் பதவி விலகிவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-ரி)

### கிரேக்கத்தில் 270 அகதிகள் கைது!

ஏதென்ஸ்,ஜன.9

270 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களை ஏற்றிச் சென்ற படகு ஒன்றை கிரேக்கப்பொலிஸார் கடந்த சனிக்கிழமை இரவு கைப்பற்றியுள்ளனர்.

துருக்கிய கொடியுடன் பயணம் செய்துகொண்டிருந்த இந்தப் படகை கைப்பற்றிய கரையோரப் பாதுகாப்புப் படையினர் அதை பொலிஸ் பாதுகாப்புடன் றபீனா துறைமுகத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

இப்படகினுள் இருந்தவர்கள் எந்த நாட்டினர் என்பது தெரியவரவில்லை.

# திவ்வியனின் விடுதலை குறித்து துரித நடவடிக்கை எடுக்குக!

## பிரதமருக்கு தொழில்நுட்ப மாணவர் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.நீதிமன்றத்தின் உத்தரவுப்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை விடுதலை செய்ய துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியம் மேற்கண்டவாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை கோரியுள்ளது.

பிரதமருக்கு ஒன்றியம் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதிதாக ஆட்சி அமைத்துள்ள உங்களுக்கும் உங்கள் அமைச்சரவைக்கும் தொழில்நுட்ப மாணவர் சமூகத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த நாட்டில் நீண்டகாலமாக தொடர்ந்து வரும் இக்கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர உங்களால் முடியும் என நம்புகின்றோம். அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வரும் உங்கள் முயற்சிகளுக்கு தமிழ் சமூகம் முழு ஆதரவைத் தரும என்பதைக் கூறுகின்றோம். தங்களின புதிய ஆட்சியில் தமிழ் சமூகத்துக்கு விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்தக் கடிதத்தை அனுப்புகிறோம்.

பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையால் தமிழ் சமூகமே உறைந்து போயிருந்த வேளை மாணவர்களையும் மக்களையும் ஒன்றுதிரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தி இந்தக் கொலையின் சூத்திரதாரிகளை அம்பலப்படுத்தியவர்களில் ஒருவரான திவ்வியனுக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. இதன் பின்னணியிலேயே திவ்வியன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்டார்.

இச்செயல்களுக்கு மாணவர் கடும எதிர்ப்பு தெரிவித்தபோது பல்கலைக்கழகத்தை மூடியது மட்டுமன்றி மாணவர் பலருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதிலிருந்து இவரின் கைது ஒரு அரசியல் சதி நாடகம் என்பது நன்கு தெளிவாகிறது. இதனால் திவ்வியன் தனது கல்வியை தொடராது உள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இவரின் விடுதலை தொடர்பாகக் கடிதம் ஒன்றை தங்களுக்கு அனுப்பியிருந்தது. எனினும் இதுவரை இவர் விடுதலை செய்யப்படாமையால் நாம் மிகுந்த மனவேதனை அடைகிறோம். தாங்கள் இனியாவது திவ்வியனின் விடுதலைக்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(க-3)

### ஒளிவிழா

குருநகர்,ஜன.9

பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஒளிவிழா இன்று காலை 9 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் ஜே.பி.ஈ. செல்வராசா கலந்து கொளவார்.

(க-3)


## துயர் பகிர்கின்றோம்

எமது கலாசாலையில் பயிலும் சக நண்பன்
திரு.சிவஞானம் ஞானகுமாரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிவஞானம் இராசமணி**

அவர்கள் மறைந்தது குறித்து கவலையடைகின்றோம். அன்னாரின் 31ஆவது நினைவு தினமான இன்று அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கேற்று அவரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஆரம்பநெறி 'A' பிரிவு
ஆசிரிய/மாணவர்கள், முதலாம் வருடம்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

(96865)



## எக்ஸ் கதிர் இயந்திரத்தை ஏலத்தில் விடல்

எதிர்வரும் 31.01.2002 அன்று ஏலத்தில் விற்பதற்கு எம்மால் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் அரச அதிபர் இந்த எக்ஸ் கதிர் இயந்திரத்தை தன்னிடம் அனுப்பும்படி அவரது 03.01.2002 கடிதத்தின்படி கோரியுள்ளார். எனவே ஏலத்தில் விற்கப்படுவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

பணிப்பாளர்
வைத்தியகலாநிதி (செல்வி)என்.கனகரத்தினம்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C/20159)



## உருகும் மெழுகுகள்...!

யா/யூனியன் கல்லூரியின் பழைய மாணவனும்
புகழ்பூத்த இரசாயனவியல் ஆசிரியருமான



**அமரர் ஆ.மகாதேவன்**

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக!

யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.
யா/பொன்பரமானந்தர் ம.வி.,
குரும்பசிட்டி.
(96869)
பாடசாலைச் சமூகம்.



## முக்கிய அறிவித்தல்

நுணாவில், மட்டுவில், சரசாலை 'வணிகர் கழக' வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி (புதிய நேரம்) K.K.S. வீதி, கோண்டாவிலுள்ள ஈசன் கல்வி நிலையத்தில் நடைபெறும். அன்றையதினம் 2002ஆம் ஆண்டுக்குரிய புதிய நிர்வாகிகள் தெரிவும், புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தலும் நடைபெறும். சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்.

*நுணாவில், மட்டுவில், சரசாலை,*
*வணிகர் கழகம்.*
(96857)
செ.நித்தியானந்தன்
*செயலாளர்*


## சனசமூக நிலையங்களுக்கான கலந்துரையாடல்

ஊர்காவற்றுறை,ஜன.9

ஊர்காவற்றுறை பிரதேசசபை எலலைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பான முன்மொழிவுகளை தயாரிக்கும் பொருட்டு இப்பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(ம-16)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் நொக்கவுட் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி - கிறீன் கிங்ஸ் எதிர் யாழ். பல்கலைக் கழகம்.

★ காலை 4.30 மணி - காந்திஜி எதிர் கலைவாணி.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.9

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் - யாழ்.மாவட்டம், ஆசிரியர்களுக்கிடையில் நடத்திவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பி.ப.3 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பலாலி ஆசிரிய கலாசாலையும் கரவெட்டி கல்விக் கோட்டமும் பங்குபற்றுகின்றன.

(ம- 3)

## அராலியில் உழவர் விழா

யாழ்ப்பாணம்,ஜன.9

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் உழவர் விழா தைப்பொங்கல் தினத்தன்று மதியம் 12 மணிமுதல் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மாட்டுவண்டி சவாரி, உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் உட்பட பல நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

(க-3)

## சண்டிலிப்பாயில் மேசன், தச்சுவேலை பயிற்சிநெறி

நவாலி,ஜன.9

ஸ்ரீலங்கா தொழிற் பயிற்சி அதிகாரசபை சண்டிலிப்பாய் பிரதேச செயலருடாக நடத்தவிருக்கும் மரவேலை, மேசன்வேலைப் பயிற்சிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு வருடகாலம் இடம்பெறும் இப்பயிற்சிநெறிக்கு 16 முதல் 40 வயதுககு இடைப்பட்ட 8 ஆம் ஆண்டு சித்தியடைந்தவர்கள் விண்ணப் பிக்கலாம்.

பயிற்சிக் காலத்தின்போது ஊக்குவிப்புத் தொகையாக 450 ரூபா மாதாநதம் வழங்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள ஸ்ரீலங்கா தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(ம-100)


SPOKEN ENGLISH

Start:- 10.01.2002
(morning 8.00)
by:- SIVAPOUL

STAR INSTITUTE
CHUNNAKAM.
(96873)

A/L 2004
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: ஜனவரி 12
BEACON யாழ்.



## வீட்டுக்கிருத்திய அழைப்பு பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் 11. 01. 2002 வெள்ளியன்று நடைபெறவிருந்த எங்கள் குடும்பத் தலைவர் **அமரர் ஏரம்பு பேரம்பலம்** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திப்போடப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
*198/1, பொன்னப்பா லேன்,*
*ஓட்டுமடம்.*
(96879)
திருமதி ரஞ்சிதமலர் பேரம்பலமும்
குடும்பத்தினரும்.


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை முத்துக்குமாரு

*(வர்த்தகர் - சாவகச்சேரி)*

புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தை (ஊரதீவு) பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் தற்போது இல.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான சின்னத்துரை முத்துக்குமாரு 06-01-2002 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெயகுமாரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சின்னத்துரை - செங்கமலம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் ஜெயலட்சுமி தம்பதியினரின் மருமகனும் ஈஸ்வரி (புங். - 7), இலட்சுமி (வன்னி), வில்வலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் இராசரத்தினம் (கொழும்பு), அன்னம்மா (வன்னி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் குமாரசாமி, காலஞ்சென்ற பத்மநாதன், லோகநாயகி (சுவிஸ்), சுந்தரலிங்கம் (கொழும்பு), சத்தீஸ்வரி (கொழும்பு), பரமேஸ்வரன் (வன்னி), கனகாமிர்தம், காலஞ்சென்ற ரோகினிதேவி மற்றும் உதயகுமாரி (பிரான்ஸ்), வசந்தகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் மருதலிங்கம் (சாவகச்சேரி), நவராசலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09-01-2002) புதன்கிழமை பி.ப.3.30 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயகுமாரி (மனைவி),
க.மருதலிங்கம் (சகலன்)
*(மருதம் உணவகம், சாவகச்சேரி.)*

*45, மணிக்கூட்டு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(96867)

## இளையதம்பி பத்மநாதன்

சுதுமலையைச் சேர்ந்தவரும் தற்போது இந்தியா புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் வசித்தவருமாகிய இளையதம்பி பத்மநாதன் நேற்றுமுன்தினம் (07.01.2002) திங்கட்கிழமை காலமானார்.

இவர் புஸ்பராணியின் அன்புக் கணவரும் கஜலக்சுமி, அகிலாண்டேஸ்வரி ஆகியோரின் தந்தையும் சுதுமலை இளையதம்பி - அழகம்மாவின் மகனும் இணுவில் காலஞ்சென்ற த.நடராஜா (ஆசிரியர்) - கமலாம்பிகை ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புட்டபர்த்தி (இந்தியா)யில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.சிவானந்தன்
(சகலன்)

*இணுவில் தெற்கு,*
*இணுவில்.*
(C/20160)

## நாகலிங்கம் செல்வராசா

(இளைப்பாறிய ஓவசியர், நீர்ப்பாசன திணைக்களம்)

சோனக தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகலிங்கம் செல்வராசா நேற்று (08.01.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் கணவரும், ஜெயமணியின் தந்தையாரும் அருணபாலனின் மாமனாரும் நாகேஸ்வரன், நிரஞ்சலாதேவி, சிவயாழினி, சிவகஜனி ஆகியோரின் பேரனும் திருமதி சறோஜினி திருநாவுக்கரசு, ஜெயராம், குணலிங்கம், திவ்வியம், திருமதி நேசமணி சிவானந்தம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2002) புதன்கிழமை 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.த.அருணபாலன் (மருமகன்)
திருமதி அ.ஜெயமணி
(மகள்)

*76,B.S.லேன்,*
*சோனக தெரு,*
*யாழ்ப்பாணம்.*
(96876)

## திருமதி தம்பிராசா தையலம்மா

**(செல்லம்)**

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு, தம்பசிட்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா தையலம்மா 04.01.2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும் நித்தியானந்தராசா (கனடா), மாலினிதேவி (பிரான்ஸ்), சதானந்தராசா (பிரான்ஸ்), ஜெயந்தினிதேவி (கிளிநொச்சி), குகானந்தராசா (பிரான்ஸ்), சித்திராதேவி (உரும்பிராய்) ஆகியோரின் அருமைத் தாயாரும் ரஞ்சனமாலா (கனடா), தேவராசா (பிரான்ஸ்), வசந்தா (பிரான்ஸ்), சந்திரன் (கிளிநொச்சி), அருளானந்தம் (மதி - உரும்பிராய்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோசா (கனடா), நிரோசன் (கனடா), மித்திரன் (பிரான்ஸ்), ஜனனி (விசுவமடு), பங்கஜன் (விசுவமடு), நிரூசன் (உரும்பிராய்), நிந்துஜா (உரும்பிராய்), நிரோஜா (உரும்பிராய்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2002) புதன்கிழமை 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
T. தம்பிராசா *(கணவர்)*
அருளானந்தம் *(மதி - மருமகன்)*
நித்தியானந்தராசா *(மகன்)*

*தம்பசிட்டி வீதி,*
*உரும்பிராய் கிழக்கு.*
(C/20161)

உதயன்

## தமிழ் எம்.பிக்கள் ஒன்றுபடுவார்களா?

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கான அமைதி முயற்சிகள் முளைவிட்டு முகிழத் தொடங்கியுள்ள இந்தவேளையில் -

தமிழர்களுக்கு எதிராக அரச பயங்கரவாதத்தின் கொடூரப் பிடிக்கு சட்ட அந்தஸ்து வழங்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பற்றிய விவகாரம் சர்ச்சைக்கு வந்திருக்கின்றது.

1995முதல் நாட்டை அவசரகாலச் சட்டத்தின்கீழ் ஆண்டு வந்த சந்திரிகா அரசு அதன்மூலம் பல கெடுபிடி நடவடிக்கைகளைத் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்டது. வகைதொகையின்றி அப்பாவித் தமிழர்களைக் கைதுசெய்து, வேட்டையாடி, காரணமின்றி சிறையில் அடைத்து, விசாரணையின்றித் தடுத்து வைத்து அழுந்தச் செய்தது. பத்திரிகைகளை 'சீல்' வைத்து, வெகுஜன ஊடகங்களின் குரல் வளையைப் பிடித்து நசுக்குவது வரை சந்திரிகா அரசுக்கு அவசரகால நிலையும் அது தொடர்பான சட்டங்களும் கைகொடுத்து உதவின.

ஆனால் நாடாளுமன்றத்தில் அவசரகால நிலையை நீடிக்கும் பிரேரணையை நிறைவேற்றுவதற்கான பலத்தைக் கடந்த ஆண்டில் அரசியல் ரீதியாக சந்திரிகா அரசு இழந்தபோது, அவசரகால நிலை காலாவதியாக, அதன்கீழ் மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளை சந்திரிகா அரசு தொடர்வதற்கு வாய்ப்பளித்தது பயங்கரவாதத் தடுப்புச்சட்டம்தான்.

அந்தச் சட்டவிதிகளுக்குக் கீழ் தான் ரணிலின் புதிய அரசின் ஆட்சியில் அந்தக் கெடுபிடிகள் தொடர்கின்றன.

இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையும் அதற்கு இதுவரை கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டங்களையும் ரத்துச் செய்யவேண்டும் என்று கோரி தனிநபர் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வருகின்றார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்குப் பயங்கரவாத முலாம் பூசி, விடுதலைப் போராளிகளையும் அத்தோடு சேர்த்து அப்பாவித் தமிழர்களையும் அடக்கி ஒடுக்கக் கொண்டுவரப்பட்ட சட்டத்தினால் அந்த விடுதலைப் போராட்டத்தை அடக்கிவிடமுடியவில்லை. மாறாக அந்தச் சட்டத்தின் கொடூரத்தைக் கண்டு தமிழ்ச் சமூகம் மேலும் கொதித்தெழுந்து விடுதலைப் போராட்டத்துக்கு உந்து சக்தியாய் விளங்குதற்கு அந்தச் சட்டமே அவர்களைத் தூண்டியது எனலாம்.

இந்த வகையில், அந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதற்கான நோக்கங்கள் எட்டப்படாமல், அதனால் எதிர் விளைவுகளே ஏற்பட்டன என்று சுட்டிக் காட்டுகின்றார் விநாயகமூர்த்தி எம்.பி.

இந்த நாட்டில் மோசமான மனித உரிமை மீறல்களுக்கு இச்சட்டம் காரணமாக அமைந்துள்ளதாகவும் -

இச்சட்டத்தின் மூலம் பொலீஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அளவுகடந்த அதிகாரம் பொலீஸாரால் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதாலும் -

இச்சட்டம் ரத்துச்செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்துகின்றார் அவர்.

கடந்த இரண்டு தசாப்த காலத்துக்கு மேலாக தமிழரையும் அவர் தம் சுபீட்ச வாழ்வையும் அடக்கப் பயன்படுத்தப்பட்டுவரும் இந்தச் சட்டத்தை ரத்துச் செய்ய வைப்பதும் அதற்காக உழைப்பதும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரதும் கடமை யாகும்.

இந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டு, பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட முன்னாள் போராளியான டக்ளஸ் தேவானந்தாவில் இருந்து அமைச்சர் சந்திரசேகரன் வரை உள்ள அனைத்துத் தமிழ் எம்.பிக்களும் நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டத்தை ரத்துச்செய்யச் செய்வதில் கட்சி வேறுபாடின்றி ஒன்றுபட்டு உழைக்க முன்வரவேண்டும்.

தமிழ் எம்.பிக்கள் - அரசுத் தரப்பில் இருக்கும் அமைச்சர் மகேஸ்வரன் உட்பட - அனைவரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்துச் செய்யக் கோரும் பிரேரணையை - கட்சி வேறுபாட்டுக்கு அப்பால் - ஒன்றிணைந்து ஆதரிப்பதன் மூலம் இந்தச் சட்டத்தை முழுத் தமிழ்ச் சமூகமுமே நிராகரிக்கின்றது என்பதை சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்த முன்வரவேண்டும்.

இந்தப் பிரேரணையை அவர்களால் நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாமல் போனாலும் கூட, இதுவிடயத்தில் அவர்கள் ஐக்கியப்பட்டு நிற்பது, இந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு, நீண்டகாலம் சிறையில் வாடும் நம் தமிழ்ச் சகோதரர்களுக்கு, முழுத் தமிழ்ச் சமூகமுமே அவர்களுடன் சேர்ந்து நிற்பது போன்ற ஆறுதலைத் தரும் என்பது உறுதி.

## மாவீரர் நினைவாக வன்னியில் நூலகங்கள் பல திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியின் பல இடங்களிலும் மாவீரர்கள் நினைவாக நூலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன.

விசுவமடு றெட்பானா இளங்கோபுரம் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அரசியல் துறையின் ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மாவீரர் நினைவாக நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராசா நாடாவை வெட்டி நூலகத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.

முத்தையன்கட்டு முதலாம் கண்டம் முத்துவிநாயகபுரம், மல்லாவி வெண்ணிலா கல்வி நிலையம், குமிழமுனை ஆகிய இடங்களிலும் கடந்த மாதத்தில் நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

வன்னியின் வேறு பல இடங்களில் திறக்கப்பட்ட மாவீரர் நினைவு நூலகங்கள் வெற்றிகரமாக இயங்கிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## நாட்டு நடப்பு

### படலைக்கு போடு தாழ்பாள்

ஆனையைக் கண்டுவிட்டால் ஐம்பதடி தள்ளி ஓடு
சேனையைக் கண்டுகொண்டால் சிறப்பு "அடையாளை" அட்டை காட்டு
கொடும் விசர் நாயைக் கண்டால் கொட்டனை கொண்டு ஓடு
படு குடிகாரனைக் கண்டால் படலைக்குத் தாழ்பாள் போடு.

- *விகடகவி.*

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஜன.9

இந்துசமய விவகார அமைச்சின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் தினத்தன்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள கலாசார நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அனைத்து கலாசார உத்தியோத்தர்களையும் கலந்துகொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் கேட்டுள்ளார். (ம)

### சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்காததன் விளைவு

## இந்திய மீன்பிடி 'றோலர்'களால் தீவக மீனவர்களுக்குப் பாதிப்பு!

ஊர்காவற்றுறை,ஜன.9

இலங்கையின் கடல் பிராந்திய எல்லைக்குள் பிரவேசித்து தீவுப் பகுதிகளுக்கு சமீபமாகத் தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் 'றோலர்'களால் கடலில் இடப்படும் தமது வலைகள் தொடர்ந்து அறுக்கப்பட்டு நாசப்படுத்தப்பட்டு வருவதுடன், தமது தொழில் நடவடிக்கைகளும் பாதிப்படைந்து வருவதாகத் தீவுப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவுக் கரையோரங்களுக்கு மிகச் சமீபமாக இந்திய மீனவர்களது 'றோலர்'கள் வந்து கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் தமது பிரதேசத்தின் மீன்வளம் வெகுவாகக் குன்றி வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை ஏதும் எடுக்காதிருப்பது குறித்து அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தக் கடற் பகுதிகளில் தற்பொழுது பிளாஸ்ரிக் படகுகளில் சென்று மீன்பிடிப்பதற்கு தீவக மீனவர்களைக் கடற்படையினர் அனுமதிப்பதில்லை எனவும் -

இதனால் கட்டுமரங்களிலேயே கடற்றொழிலுக்கு செல்லவேண்டியுள்ளதாகவும் -

அவற்றில் அதிக தூரம் சென்று தொழில் செய்யமுடியாதுள்ளதால் தமது வருமானம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் -

அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ம-16)

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

## பாதிக்கப்பட்ட 16,000 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கவில்லை

முல்லைத்தீவு மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணம் பெறத் தகுதியுடைய 16ஆயிரத்து 901 குடும்பங்களுக்கு கடந்த அரசு இது வரை நிவாரணம் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தம் காரணமாக வேறு மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த 31ஆயிரத்து 981 குடும்பங்கள் முல்லை மாவட்டத்தில் தங்கியுள்ளன. இவற்றில் 29ஆயிரத்து 038 குடும்பங்கள் உலர் உணவு பெறத் தகுதியுடையவை என்று அதிகாரிகளால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. அதில் 22ஆயிரத்து 427 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 12ஆயிரத்து 137 குடும்பங்களுக்கு பொ.ஐ.மு. அரசு மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கி வந்தது. இதனால் நிவாரண உதவி கிடைக்காத மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர்.

நிவாரண உதவி வழங்கப்படாத - பாதிக்கப்பட்டுள்ள - 16ஆயிரத்து 901 குடும்பங்களுக்கும் நிவாரண உதவிகளை வழங்குமாறு முல்லைத்தீவு அரச அதிபர் புதிய அரசைக் கேட்டுள்ளார். இது குறித்து புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக தான் அமைச்சரை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.(ம)

### வரலாறுகளை தந்துதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.9

நல்லூர் பிரதேச சபையின் 2001 ஆண்டுக்கான மலர் வெளியீட்டு விழா இம்மாதம் நடத்தப்படவுள்ளதால் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சமய, சமூக பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள், அரச நிறுவனங்களின் வரலாறுகள் என்பன யாரிடமாவது இருப்பின் அவற்றை மலரில் வெளியிட உதவுமாறு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மலர் வெளியீட்டை இம்மாதம் இறுதியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் விரைவில் அந்தத் தகவல்களைத் தந்துதவுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ம-180)

## கரையோரப் பகுதிப் பாடசாலைகளில் கடல்நீர் உயிர்வள பாடம் அறிமுகம்

### சேவை அடிப்படையில் கற்பிக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பாடசாலைகளில் இந்த ஆண்டில் இருந்து கடல்நீர் உயிர்வளத் தொழில நுட்பப் பாடத்தைக் கற்பிப்பதற்கு மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் முன்வந்துள்ளது.

வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தினால் மேற்படி பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடத்தைக் கற்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு இணங்க இந்த ஆண்டு முதலாம் தவணையில் இருந்து சேவை அடிப்படையில் தாம் இந்தப் பாடத்தைக் கற்பிக்கவுள்ளதாகச் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கெனச் சில பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. 'பாடசாலை நேரசூசியில் இப்பாடத்தையும் சேர்த்துக்கொள்வதற்கு அனுமதி வழங்குமாறும் -

கடல்வள அபிவிருத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி உதவுமாறும் - மாவட்டத்தின் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் மேற்படி சங்கம் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் எமது சங்கத்தால் நடத்தப்பட்ட கடல்வள கல்விக் கருத்தரங்குகள்மூலம் பெருமளவான மாணவர்களும் பாடசாலை அதிபர்களும் இப்பாடத்தினைக் கற்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தனர். இது பற்றி எமது சங்கம் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெரியப்படுத்திய போதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆகவே சேவை அடிப்படையில் எமது பணியை ஆரம்பிக்கின்றோம் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

### தைப்பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.9

இளவாலைத் திருமறைக் கலாமன்றத்தின் தைப்பொங்கல் விழா எதிர்வரும் பொங்கல் தினத்தன்று இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் பொங்கல் நிகழ்வைத் தொடர்ந்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபத்தில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இக்கலை நிகழ்ச்சிகளில் நடனங்களுடன், 'இன்றைய இளைஞர்களின் ஒழுக்கச்சீர்கேட்டிற்குக் காரணம் பெற்றோரா? சமூகமா? என்ற தலைப்பில் பட்டிமன்றமும், சிறப்பு நிகழ்ச்சியாக இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளுக்கு பிரதமவிருந்தினராக இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் அ.பேரம்பலம் கலந்துகொள்வார். (ம-8)

### திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.9

நல்லூர், கோயில் வீதி, செட்டித் தெரு ஒழுங்கையிலுள்ள எஸ்.கனகரத்தினத்தின் இல்லத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (ம)

### கைதடியில் மீளக் குடியமர மக்கள் ஆர்வம்

கோப்பாய்,ஜன.9

கைதடிப் பகுதியில் மீளக்குடியமர்வதில் பெருமளவு மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கோப்பாய் மற்றும் உரும்பிராய், நீர்வேலி பகுதிகளில் தங்கியிருந்த கைதடி மக்களே தமது பொருள்களுடன் லான்ட்மாஸ்ரர், வண்டில் போன்ற வாகனங்களில் கோப்பாய் கைதடி வீதியூடாக தமது இருப்பிடம் நோக்கிச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. (ம-72)

### நாளை

மார்கழி 26
வியாழக்கிழமை
(10-01-2002)
திதி : துவாதசி
மாலை 6.57 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
பிற்பகல் 12.36 வரை.
சுபநேரம் : 1.43 - 4.33
ராகுகாலம் : 2.03 - 3.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

முட்டாள் மன்னிக்கவும் மாட்டான் மறக்கவும் மாட்டான்.
சராசரி புத்தி உடையவன் மன்னிப்பான் மறந்தும்போவான்.
அதிபுத்திசாலி மன்னிப்பான். ஆனால் மறக்கமாட்டான்.

### பாதுகாவலர் சங்கத்துக்குக் கிடைத்த கடிதம்:

## சட்டமா அதிபருக்கு எதுவும் தெரியாதாம்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.குடாநாட்டில் 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோரில் 167 பேர் வன்செயல்களால் கொல்லப்பட்டதாகத் தெரிவித்துப் பாதுகாவலர் சங்கத்துக்கு அனுப்பப்பட்ட கடிதம் யாரால் எழுதப்பட்டது என்று தனக்குத் தெரியாது என சட்டமா அதிபரினால் பாதுகாவலர் சங்கத்துக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் நேற்றுப் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளருக்குக் கிடைத்துள்ளது.

குறிப்பிட்ட 167 பேரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கும் கடிதத்தின் பிரதியையும், குறிப்பிட்ட 167 பேரின் பெயர்ப் பட்டியலையும் உடனடியாகத் தனக்கு அனுப்பிவைக்குமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறிப்பிட்ட கடிதத்தின் பிரதியும் பெயர்ப்பட்டியலும் செயலாளரினால் கடுகதித் தபாலில் நேற்று சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

குறிப்பிட்ட 167 பேரும் வன்செயல்களால் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கும் கடிதம் வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவரினால் யாழ்.அரசாங்க அதிபர் ஊடாக பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதிகளிடம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

மணிக்குரலின் மணிவதனன், ஜெயச்சித்திரா
*7ஆம் ஆண்டு*

ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பம்

கரம் ஒற்றையர், இரட்டையர் ஆட்டம் - ஆண்/பெண்

இருபாலாரும். பங்குபற்ற விரும்பும் வீரர்கள் அதற்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமிடங்கள்:

*மணி வீடியோ* – B.S.சற்குணன், 52, மார்ட்டீன் றோட், யாழ்ப்பாணம்.

Y.M.C.A. கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி: **15.01.2002.**

*அன்பளிப்பு:* சுவர்ண மஹால் ஜுவல்லறி

172, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (96848)


# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

**துன்னாலை வடக்கு,புலோலி.**

எமது ஆலயத்தால் வருடாவருடம் நடத்தப்படும் திருப்பாவை ஓதுதற் போட்டி இவ்வருடமும் 06.01.2002 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆலயத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. அதன் முடிவுகள் வருமாறு:-

**கீழ்ப்பிரிவு**

*முதலாம் இடம்:* செல்வி சா.மதுசூதனா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை)
*இரண்டாம் இடம்:* செல்வி நா.சங்கரி (விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)
*மூன்றாம் இடம்:* செல்வி க.கஸ்தூரி (விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)

**மத்திய பிரிவு**

*முதலாம் இடம்:* செல்வி ஜெ.வைஷ்ணவி (மெமோறியல் ஆங்கில பாடசாலை, மானிப்பாய்)
*இரண்டாம் இடம்:* செல்வன் த.திருவாழ்மார்பன் (மகாவித்தியாலயம், புற்றளை)
*மூன்றாம் இடம்:* செல்வி செ.செல்வறஜிதா (வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி, பருத்தித்துறை)

**மேற் பிரிவு**

*முதலாம் இடம்:* செல்வி நா.தர்சிகா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை)
*இரண்டாம் இடம்:* செல்வி ஸ்ரீ.தாரணி (இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
*மூன்றாம் இடம்:* செல்வன் க.அருள்குமரன் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

பரிசில்கள் 14.01.2002 திங்கட்கிழமை தைப்பொங்கலன்று காலை 9 மணிக்கு ஆலயத்தில் வழங்கப்படும். இப்போட்டியிற் பங்குபற்றிய அனைவரையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்
அறங்காவற் குழு
(96849)

# அறிவித்தல்

**யா/கம்பர்மலை அ.த.க.பாடசாலை**
**பழையமாணவர் சங்கம்**

1) மேற்படி சங்கத்தில் சாதாரண அங்கத்தவர்களாக சேர்ந்தோர் தமது அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி (2002ஆம் ஆண்டுக்கான)தமது அங்கத்துவத்தை உறுதிசெய்யுமாறும் -
2) இதுவரை அங்கத்தவர்களாகச் சேராதோர் இதற்குரிய விண்ணப்பப் படிவத்தை செயலாளர் திரு. இரா. அகிலனிடம் பெற்று பூரணப்படுத்தி 20.01.2002 இற்குமுன் ஒப்படைக்குமாறும் -
3) எமது சங்கமானது 1999-2001 காலப்பகுதியில் செய்த செயற்பாடுகளில் தனிநபருக்கோ அல்லது நிறுவனத்துக்கோ ஏதேனும் கொடுக்கல் - வாங்கல்கள் இருப்பின் உடனடியாக பொருளாளர் திரு. சு. செந்தூரனிடம் தொடர்புகொள்ளுமாறும்-
4) ஏதேனும் பிரேரணைகள் இருப்பின் எழுத்து மூலம் 20.01.2002இற்கு முன் செயலாளரிடம் ஒப்படைக்குமாறும் - கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

இரா.அகிலன்
செயலாளர்
(96847)

# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 | 02 |
| - | - |
| 04 | 01 |
| - | - |
| 1928 | 2000 |

## அமரர் தம்பாபிள்ளை சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

*திதி - அபரபக்ஷ ஏகாதசி*

அன்புக்கும் பண்புக்கும் பிறப்பிடமாய் பாசத்தின்
ஒளிவிளக்காய் வாழ்ந்து எங்கள் குடும்பத்தின்
விடிவிளக்காய் எல்லோரையும் பெருமையுடன்
நல்வழி நடத்தி வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு இரண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சை விட்டு அகலாது.

உங்கள் பிரிவுத் துயரில் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர், மைத்துனர்.

*தற்காலிக முகவரி:*
*தலையாளி வீதி,*
*கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.*

*நிரந்தர முகவரி:*
*கட்டுவன், வர்த்தலைவிளான்,*
*தெல்லிப்பழை.*

(96773)

# பஸ் சேவை அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.9

தென்மராட்சிப் பகுதிக்கான பஸ் சேவையை வடபிராந்திய போக்குவரத்துச்சபை அதிகரித்துள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் வதிவோரினதும், அங்கு மீளக்குடியமர்ந்து வருவோரினதும் நன்மைகருதி இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணத்திற்கும் மிருசுவிலுக்குமிடையே சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பஸ்களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து மூன்றாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று பஸ்களும் தற்சமயம் மிருசுவிலுக்கும் - யாழ்ப்பாணத்திற்குமிடையே தினமும மொத்தம் 18 சேவைகளை மேற்கொள்ளுகின்றன.

இதுதவ பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம், சாவகச்சேரி, நுணாவில வழியாக சரசாலைவரை பிறிதொரு சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ம-15)

# பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த ஆங்கிலம் 1(356) பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிற்போடப்பட்டுள்ளதாகவும்-

இன்று நடைபெறவுள்ள ஆங்கிலம் 2(357) பரீட்சை திகதியில் மாற்றமில்லையென்றும் - கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

(ஒ)

# தெய்வீக இசையரங்கில்

வலி.வடக்கு, ஜன.9

மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய ஆலயத்தில் 8ஆம் நாள் தெய்வீக இசையரங்கு இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக நடனத் துறைப் பேராசிரியர் சபா ஜெயராசா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பார்.

யாழ்.பல்கலைக்கழக இசைத் துறை விரிவுரையாளர் செல்வி கல்யாணி ஸ்ரீரங்கநாதனின் இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

(ம-86)

# அம்புலன்ஸ் மீள ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

பளை அரசினர் வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டி படையினரால் யாழ்.சுகாதார சேவை பகுதியினரிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த நிலையிலுள்ள இந்த அம்புலன்ஸ் வண்டியைத் திருத்தியமைத்து நோயாளர்களுக்கான சேவையிலீடுபடுத்துவதற்கு தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதன்பொருட்டு பொறியியலாளர் குழுவொன்று அம்புலன்ஸ் வண்டியை பரிசோதித்துத் திருத்தவேலைகளுக்கான மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்து வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு அதனை அனுப்பிவைத்துள்ளது. நிதியொதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படுமென யாழ் சுகாதார சேவைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-15)

# வீட்டு முற்றத்தில் நின்ற சைக்கிள் திருட்டு!

யாழ்ப்பாணம், ஜன.9

வீட்டு முற்றத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டினுள் சென்றவர் திரும்பி வருவதற்குள் அவரது சைக்கிளை திருடன் ஒருவன் அபகரித்துச் சென்ற சம்பவம் கடந்த செவ்வாயன்று யாழ்ப்பாணம் கோயில் வீதியிலுள்ள வீட்டில் இடம்பெற்றது.

மேற்படி வீட்டில் வசிக்கும் இளம் பெண் ஒருவர் அன்றையதினம் கடைக்குச் சென்று பொருள்களை வாங்கிக்கொண்டு திரும்பியதும் சைக்கிளை வீட்டு முற்றத்தில் நிறுத்திவிட்டு வீட்டிற்குள் சென்று சற்று நேரத்தில் திரும்பியபோது அவரது சைக்கிளை திருடன் ஒருவன் எடுத்துச் செல்வதை கண்டார். உடனே அவர் திருடன் எனக் குரல் எழுப்பியவாறு அவனைத் துரத்திச்சென்றார். எனினும் அவனைப் பிடிக்க முடியவில்லை. அச்சமயத்தில் அயலவர்கள எவரும் திருடனைப் பிடிக்க முன்வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம-8)


ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கம் அலுவலகம்
45, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## 34ஆவது பொதுக்கூட்டம்

09-01-2002

இன்று (09.01.2002) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் கூட்டம் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்

| | |
|---|---|
| மங்கள விளக்கேற்றல் - | திரு. இ.இராமலிங்கம் (யாழ்.மாநகர ஆணையாளர்) |
| வாழ்த்துரை :- | திரு.செ.மார்லின் பெர்ணான்டோ |
| வரவேற்புரை :- | திரு.S.தேவதாஸ் (பொருளாளர்) |
| தலைவர் உரை :- | மெய்யழகன் எட்வின் |
| செயலாளர் உரை :- | திரு.யே.ரஜனிகாந்த் |
| பிரதம விருந்தினர் :- | திரு.செ.கந்தையன் (பிரதி முதல்வர், யாழ்.மாநகரசபை) |
| சிறப்பு விருந்தினர்கள் :- | திரு.மனுவல் மங்களநேசன் (யாழ்.மாநகர சபை சுகாதாரக் குழுத் தலைவர்) |
| | திரு.மு.தவநாதன் (யா.மா.ச. உறுப்பினர்) |
| | திரு.ஜீவரட்ணம் பொறுப்பதிகாரி (பொ.சு.பொ.பிரிவு) யா.மா.ச. |
| | திரு.தேவலோகராசா |
| | திரு.முகுந்தன் (மேற்பார்வையாளர்-யா.மா.சபை) |
| | திரு.க.மணிபல்லவராஜன் (அமைப்பாளர், E.P.D.P.) |

*குறிப்பு:-* இக்கூட்டத்திற்கு கன்னாகக் கிளைச் சங்கமும் வல்வெட்டித்துறைக் கிளைச் சங்க அங்கத்தவர்களும் கலந்துகொள்வார்கள்.

*முக்கிய குறிப்பு:-* குலுக்கல் முறையில் இந்த அங்கத்தவர்களுக்கு பரிசில் வழங்கப்படும். அதிஷ்டம் யாருக்கோ அவர்களே பெற்றுக்கொள்ளுங்கள். சென்ற வருட செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தல். சென்ற வருட பொருளாளர் வரவு - செலவு அறிக்கை சமர்ப்பித்தல்.

நன்றி உரை :- திரு.ப.ரஜனிகாந்த் (காந்தன்)

2002 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத்தெரிவு. அனைத்து அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அலுவலகம்:
45, சென்.பற்றிக்ஸ் றோட்,
யாழ்ப்பாணம். (96833)

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கம்.


# என்றும் எம் நெஞ்சில் நீங்காத 3ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 | 13 |
| - | - |
| 10 | 01 |
| - | - |
| 1939 | 1999 |

## திருமதி இரஞ்சிதபூரணி கோபாலகிருஷ்ணன்

(இளைப்பாறிய அந்தரங்கக் காரியதரிசி, மக்கள் வங்கி)

*திதி:* 09.01.2002

ஆண்டுகள் மூன்றென்ன மூவாயிரந்தான் சென்றாலும்
மாறாது உங்கள் நினைவு எம் அம்மாவே!

*51/7, செட்டித்தெரு,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

- கணவர்,
மகன், சகோதரர்கள்.
(96736

# பாசமிகு அப்பாவின் பத்தாவது நெஞ்சுருகும் நினைவுநாள்



| அன்னை மடியில் | ஆண்டவன் அரவணைப்பில் |
|---|---|
| 10 | 31 |
| - | - |
| 03 | 12 |
| - | - |
| 1932 | 1991 |

## அமரர் வல்லிபுரம் சதாசிவம்

*(முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O) யாழ்.மாநகரசபை)*

*திதி:* 09.01.2002

பாசத்தின் சிகரமாய்த் திகழ்ந்த அப்பாவை
பத்தாண்டுகளாகப் பாரினிலே தேடிப் பரிதவித்து நிற்கின்றோம்
அப்பாவின் பிரிவை ஆற்ற முடியாது துடிக்கின்றோம்.
*எம் ஆசை அப்பாவின் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*மிஷன் பாடசாலை வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மருமகன்,
பிள்ளைகள்.
(C-20117)

# யாழ். - வவுனியா தரைப்பாதையை திறப்பது தொடர்பாக ஆராயக் குழு

## புனர்வாழ்வு அமைச்சர் தகவல்

கொழும்பு,ஜன.9

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குச் செல்லும் பிரதான தரைப்பாதையை (ஏ-9) திறப்பது தொடர்பாக ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகப் புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதையைத் திறப்பதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் தொடர்பாகவும் -

பாதையைச் செப்பனிடுவது தொடர்பாகவும் -

பாதை திறக்கப்பட்ட பின்னர் அதன் ஊடாக நடத்தப்படவிருக்கும் பஸ் சேவைகள் தொடர்பாகவும் -

இந்தக் குழுவினர் ஆராய்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

வன்னிக்கு நிவாரணப் பொருள்களை அனுப்பிவைப்பதற்கு வசதியாக வவுனியா - மடு பிரதான வீதியை எதிர்வரும் 15ஆம் திகதிக்குமுன்னர் திருத்தியமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் -

இதற்கெனத் தமது அமைச்சு ஒரு மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

மடுப்பகுதியில் கனனி மற்றும் ஏனைய பயிற்சிகளை வழங்குவதற்கான பயிற்சி நிலையங்களும் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றன. வன்னியில் அகதிமுகாம்களில் வாழும் மக்களுக்குத் தொழில் வசதிகள் மற்றும் அவர்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கான வசதிகள் என்பனவற்றை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-4-ரி)

# பொலீஸ்மா அதிபரின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பு?

## ஜனாதிபதியின் பணிப்பின்பேரில்

கொழும்பு,ஜன.9

பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவின் சேவையை மேலும் ஒருவருடத்துக்கு நீடிப்பது என ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகக் கொழும்பு வார இதழ் ஒன்று தெரிவித்தது.

இதுதொடர்பான ஆவணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தயாரிக்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகிறது. லக்கி கொடித்துவக்கு சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் தற்போது ஒப்பந்த அடிப்படையிலேயே பணியாற்றி வருகிறார்.

ஐ.தே.முன்னணி அரசு ஆட்சிக்கு வருமுன்னர் பாதுகாப்பு அமைச்சினால் பொலீஸ்மா அதிபரின் சேவை நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் புதிய அரசு ஆட்சிக்கு வந்தவுடனேயே பொலீஸ்மா அதிபர் வீட்டுக்கு அனுப்பப்படுவார் எனச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால் அரசியல் அமைப்பினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட முப்படைகளின் தளபதி என்ற அதிகாரத்தைப் பயன்படுத்திப் பொலீஸ்மா அதிபரின் சேவைக்காலம் ஜனாதிபதியால் நீடிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

(ம)

# இளவாலைப் பகுதி மாணவர்களுக்கு யாகப்பர் அபிவிருத்திச் சங்கம் உதவி

யாழ்ப்பாணம்,ஜன.9

இளவாலை சென்.ஜேம்ஸ் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களின் நன்மைகருதி இளவாலை புனித யாகப்பர் அபிவிருத்திச் சங்கத்தினர் புனித டொன் போஸ்கோ கழகத்தின் உதவியுடன் இரவு நேர கற்கும் கூடமொன்றை நடத்தி வருகின்றனர்.

மின்சார வசதியில்லாத வீடுகளில் உள்ள மாணவர்களின் நன்மை கருதியும், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டும் இந்த இரவுநேர கற்கும் கூடம் நடத்தப்படுகின்றது. இக்கற்கும் கூடத்தில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இரவு நேரத்தில் தமது கல்வியை மேற்கொள்கின்றனர்.

இதேவேளை -

5ஆம் ஆண்டு புலமைப் பரிசிலில் சித்தியடையும் மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையும், மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றையும் இளவாலை புனித யாகப்பர் அபிவிருத்திச் சங்கத்தினர் வழங்கியுள்ளனர். சென்ஜேம்ஸ் கிராமத்தில் உள்ள வசதியற்ற முதியோர்களுக்கான மருத்துவ உதவிகளையும், இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு வசதிகளையும் சங்கம் வழங்கிவருகின்றது.

இச்சங்கத்தின் செயற்பாடுகளுக்கான நிதியுதவியினை பிரான்ஸில் உள்ள இதன் கிளைச் சங்கமும் வெளிநாடுகளில் வசிக்கும் சங்கப் பிரதிநிதிகளும் வழங்கிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-8)



மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் யாழ்.மாவட்டத்தில் உள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்கை உபகரணங்களை இலவசமாக வழங்கும் நிகழ்வு கடந்த 5ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மாணவர் ஒருவருக்கு இலவச கற்கை உபகரணங்களை யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (ம-180)

# அதிகாரிகளின் அலட்சியத்தால் தொண்டர் அமைப்புகள் அவதி

கொழும்பு,ஜன.9

இலங்கை அரசின் தொண்டர் அமைப்புகளுக்கு வெளிநாட்டு அமைப்புகள் உதவிவழங்க விரும்புகின்றபோதும் அரச அதிகாரிகளின் மெத்தனப்போக்கால் உதவி செய்ய முடியாமலிருப்பதாக ஜப்பான் - இலங்கைத் தேசிய அமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.

தாம் அன்பளிப்பாக வழங்கும் பொருள்களுக்கு சுங்கவரி விலக்கு அளிக்கும்படி பலமுறை கோரியதாகவும் -

ஆனால் அதிகாரிகள் இது தொடர்பாகப் பதிலேதும் தரவில்லை என்றும் -

அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வழங்குவதற்காக ஜப்பானில் இருந்து அம்புலன்ஸ் வாகனங்கள், முச்சக்கர நாற்காலிகள் போன்ற பல உதவிப்பொருள்கள் கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரிவித்த அந்த அமைப்பின் பிரமுகர் ஒருவர், அதிகாரிகளின் அலட்சியப் போக்கால் அந்த நடவடிக்கை தாமதமாவதாகக் கூறினார்.

(ஒ-4-ரி)

# வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் அதிகரிப்பு

தென்மராட்சி,ஜன.9

அண்மையில் பெய்த கடும் மழையை அடுத்து தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் நெருப்புக் காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல், சாதாரண காய்ச்சல் என்பன வேகமாகப் பரவிவருகின்றன.

காய்ச்சலால் பீடிக்கப்படும் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சில பகுதிகளில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வருவதை அவதானிக்கமுடிகிறது.

மந்திகை ஆஸ்பத்திரியில் காய்ச்சலுக்கான இரத்தப் பரிசோதனை செய்யும் இரசாயனப் பொருள்கள் இல்லாததால் தனியார் பரிசோதனை நிலையங்களில் இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டிய நிலைக்கு நோயாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இத்தகைய தனியார் பரிசோதனை நிலையங்களில் இருந்து பரிசோதனை அறிக்கை கிடைக்கும் வரை உரிய சிகிச்சை பெறமுடியாமல் நோயாளர் அவதியுறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மழைகாலம் ஆரம்பிக்க முன்னரே காய்ச்சல் பரிசோதனை செய்யும் இரசாயனப் பொருள்கள் தேவை என அறிவித்தும் இதுவரை இரசாயனப் பொருள்கள் ஆஸ்பத்திரிக்கு வந்துசேரவில்லை என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிப்பதாகக் கூறப்பட்டது.

மந்திகை ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் காய்ச்சலைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள் பயனளிக்காத நோயாளர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

(ம-117)

### எமது மக்களின்

# அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் பாடுபடுவோம்

## ரவிராஜ் எம்.பி. தெரிவிப்பு

சண்டிலிப்பாய்,ஜன.9

நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டு, அமைதியும் சமாதானமும் ஏற்படவேண்டுமாயின் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தவேண்டும் என்று தெரிவித்தே கடந்த பொதுத்தேர்தலில் மக்களிடம் வாக்குக்கேட்டு வெற்றி பெற்றோம். தேர்தலில் நீங்கள் எமக்கு வாக்களித்து வழங்கிய ஆணையை முன்னெடுத்துச்செல்லும் அதேவேளை, எமது மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப்பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கும் பாடுபடுவோம். கொழும்பில் நாடாளுமன்ற அமர்வுகள் நடக்கும் நாள்களைத் தவிர ஏனைய நாள்களில் தொகுதிகள் தோறும் நின்று மக்களின் முக்கிய பிரச்சினைகளை - தேவைகளை நிறைவேற்ற ஆவன செய்வோம்.

பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான ந.ரவிராஜ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். சங்கத் தலைவர் சிமகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரான்பற்று கல்வி அபிவிருத்திச் சபைத்தலைவரும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவருமான எஸ்.சிவகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

ந.ரவிராஜ் அங்குதொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

கடந்த பொதுத் தேர்தலின்போது ஆயுதக்குழு ஒன்றின் அச்சுறுத்தல் இருந்து வந்ததால் தேர்தல் முடிந்தகையோடு தொகுதிகளுக்குச் சென்று மக்களை நேரில் சந்திக்க முடியவில்லை. இனிக் கொழும்பில் நாடாளுமன்ற அமர்வுகள், கூட்டங்கள் நடைபெறும் காலத்தைத் தவிர்ந்த ஏனைய நாள்களில் இங்குவந்து தொகுதிகளில் மக்களைச் சந்தித்து, மக்களின் பிரச்சினைகள் - தேவைகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இக்கிராமத்தின் பொதுத் தேவைகள் பற்றி இங்கு எடுத்துக்கூறப்பட்டது. கடந்த காலத்தில் எமது தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி, அமைச்சர் ஒருவரினால் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டது. இனிவரும் காலத்தில் இந்த நிதி தொகுதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்கு எம்மால் பயன்படுத்தப்படும் என்பதை இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

தேர்தலில் வெற்றி பெற்றதும் த.வி.கூட்டணிக்கு மூன்று அமைச்சர் பதவிகளையும், இரண்டு பிரதி அமைச்சர் பதவிகளையும் ஐ.தே.அரசு தருவதற்கு முன்வந்தது. ஆனால் தேர்தலில் மக்கள் எமக்கு வழங்கிய ஆணையை முன்னெடுத்துச் செல்லத் தடித்த திடசங்கற்பம் பூண்டுள்ள நாம் இப்பதவிகளை எக்காரணம் கொண்டும் ஏற்கமாட்டோம் என்று தெரிவித்துவிட்டோம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் எமது நிலைப்பாட்டை நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் உரை நிகழ்த்தியபோது தெளிவாக - ஆணித்தரமாக - எடுத்துக்கூறியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி போன்ற பேரினவாதக் கட்சிகளுடன் நாம் எந்த உறவையும் வைத்துக்கொள்ளப்போவதில்லை - என்றார்.

(ம-135)

# மீன்பிடித்தடை தொடர்வதால் வடமராட்சி மீனவர்கள் பாதிப்பு

வடமராட்சி,ஜன.9

வடமராட்சிப் பிரதேச கடலில் மீன்பிடிப்பதற்கான அனுமதியில் தளர்வு ஏற்படாததினால் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இப்பிரதேசத்தில் திக்கம் தொடக்கம் தொண்டமனாறு வரை மீன்பிடிக்கத் தொடர்ந்து தடைவிதிக்கப்பட்டுள்ளது. சக்கோட்டை முதல் கற்கோவளம் வரை தினமும் காலை 5.30 மணி முதல் 9 மணி வரையே மீன்பிடிக்க அனுமதிக்கப்படுகிறது.

இதேவேளை -

மீன்பிடித்தடையில் தளர்வு ஏற்படாமையினால் இப்பகுதிகளில் உள்ள மீன் சந்தைகளில் மீன்களின் விலைகள் உயர்ந்துள்ளதுடன் சந்தைகளுக்கு மீன் வருவதும் குறைந்துள்ளது.

(ம-173)

## பொலீஸார் இடமாற்றம்

கொழும்பு,ஜன.9

சுமார் 38 அதிகாரிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பொலீஸார் இடமாற்றம் செய்யப்படவிருப்பதாக பொலீஸ் தலைமையகம் அறிவித்திருக்கின்றது.

நடைமுறையிலிருந்து வழங்கப்படவிருக்கும் இந்த இடமாற்றங்கள் அடுத்தவாரம் முதல் வழங்கப்படவிருப்பதாகவும் -

இதற்கான நடவடிக்கைகளை பொலீஸ் உயர்பீடம் மேற்கொண்டு வருவதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4-ரி)

## வன்னிப் பகுதிக்கு பொருள்கள் அனுப்புவது குறித்து மாநாடு

கொழும்பு,ஜன.9

வன்னிக்கு பொருள்களை அனுப்புவது தொடர்பாக இராணுவ உயர்மட்ட மாநாடு ஒன்று பாதுகாப்பு அமைச்சகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில், வவுனியா மாவட்ட அரச அதிபர் போ.கணேஸ், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரி.ஜயபாத்துரை, மன்னார் மாவட்ட அரச அதிபர் வி.விஸ்வலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எஸ்.சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி வன்னிக்கு எவ்வாறு பொருள்களை அனுப்புவது என்பது தொடர்பாகவும் -

வவுனியா - மடு பிரதான வீதியின் பாதுகாப்புத் தொடர்பாகவும் -

இந்த மாநாட்டில் ஆராயப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-4-ரி)

# மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பதே புதிய அரசின் முக்கியமான பணி!

## அமைச்சர் ஜயலத் பேட்டி

**சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான செய்திகள் வந்த வண்ணமுள்ளவேளையில், அந்தவிடயத்தில் மிகவும் ஆர்வமுடைய அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன "ராவய" சிங்கள வார இதழுக்குப் பேட்டியொன்றை வழங்கியுள்ளார். அந்தப் பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

**தமிழில் : கஜனி**

***கேள்வி :*** இந்த நாட்டிலுள்ள இனங்களுக்கிடையே ஒற்றுமை மற்றும் சகவாழ்வு ஆகியனவற்றில் அக்கறையுடைய அரசியல்வாதியான தங்களுக்குக் கிடைத்துள்ள அமைச்சு மூலம் நீங்கள் நிறைவேற்ற உத்தேசித்துள்ள பணிகள் யாவை?

***பதில் :*** எனது அமைச்சின் அடிப்படைநோக்கமாக, முன்மாதிரியாக நான் தேர்ந்தெடுத்துள்ளது வடக்கையும் தெற்கையும் இணைக்கும் உறவுப் பாலத்தைக் கட்டியெழுப்பும் பணியாகும். இரு இனங்களுக்கிடையே அன்னியோன்யத்தையும் விசுவாசத்தையும் நல்லுறவையும் உருவாக்குவது எனது அமைச்சுக்குள்ள பாரிய பணியாகும்.

இந்த நாட்டின் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்பாக, அதற்கான பொருத்தமான சூழ்நிலையை உருவாக்குவது எமது முக்கியமான நோக்கமும் பணியுமாகும். இதற்கு முன்பு அரசின் புனர்வாழ்வு அமைச்சு வடக்கு - கிழக்கு மற்றும் தெற்கு எனத் துண்டுதுண்டுகளாகப் பிரிக்கப்பட்டு செயற்பட்டு வந்தது. ஆனால் எமது அரசு நாடு முழுவதையும் உள்ளடக்கியவிதத்தில அமைச்சை உருவாக்கியுள்ளது. புனர்வாழ்வு என்பது பொதுமக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதாகும். சாதாரண மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவைகளான சுகாதாரம், வீடமைப்பு ஆகியன எம்மால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

***கேள்வி :*** இந்த அடிப்படைத் தேவைகளுக்குத் தேவையான வசதிகளை எவ்வாறு பெறலாம் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

***பதில் :*** இதற்கான நிதியை எமது திறைசேரியில் இருந்து பெறலாம் என நான் நினைக்கவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளின் உதவிகளைப் பெற நான உத்தேசித்துள்ளேன். பல வெளிநாடுகளும், பல அமைப்புகளும் அகதிகளைப்பேணுதல், அவர்களை மீளக் குடியமர்த்துதல் ஆகியன தொடர்பான விடயத்தில் அதிக ஆர்வம் காட்டுகின்றன. ஆனால் இந்நாட்டில் அகதிகள் தொடர்பான உண்மையான புள்ளி விவரங்கள் தயாரிக்கப்படவில்லை. எனவே நாங்கள் முதலில் அகதிகள் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொண்டு உரிய தகவல்களைப்பெற முயற்சிப்போம்.

***கேள்வி :*** இந்த நாட்டில் அகதி முகாமகளில் வாழும் மக்கள் தொடர்பான உண்மையான புள்ளி விவரங்கள் பேணப்படவில்லை என நீங்கள் கூறுகிறீர்களா?

***பதில் :*** அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ளோர் தொடர்பாக ஒருசில தரவுகள் இருப்பினும், இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் அமைந்துள்ள அகதி முகாம்களில் தங்கியிருப்போர் தொடர்பாகத் தெளிவற்ற தரவுகளே உள்ளன. அங்கு தங்கியிருப்போரின் எண்ணிக்கை மாத்திரமே உள்ளது. அது போதுமானதல்ல. அவர்களின் குடும்பப் பின்னணிகள், அவர்கள் அகதிகளான விதம், எவ்வளவு காலமாக அந்த நிலையில் உள்ளனர், அவர்களது பிள்ளைகள் பற்றிய விவரங்கள் ஆகியன அடங்கிய பூரண தகவல்கள் பெறப்படவேண்டும். அதற்கு ஏற்பவே அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய வசதிகளையும் அவர்களுக்காக மேற்கொள்ள வேண்டிய பணிகளையும் தீர்மானிக்க முடியும்.

உண்மையில் எமது நாட்டில் அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் வாழ்க்கை மிகவும் துன்பகரமானது. அவர்களது கலாசாரம் மற்றும் நாளாந்த நடைமுறைகள் சீர்குலைந்துவிட்டன. ஒரு கட்டடத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நீண்டகாலத்துக்குத் தங்க வைக்கப்படுவது அநியாயமாகும். இதன்மூலம் உருவாகும் சமூக, கலாசார பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழும் இரண்டாவது தலைமுறையினரது உளப்பாதிப்புக்களானவை நாட்டுக்கு ஏற்படவுள்ள பெரும் பாதிப்பாகும். எனவே அவர்களை மீளக் குடியமர்த்துவது மட்டுமல்லாது தற்போது அவர்கள் தங்கியுள்ள இடங்களில் மேலும் வசதிகளுடன் வாழ வழிவகுப்பதும், இரண்டாவது தலைமுறையினருக்கு சமூக, கலாசார சூழலை உருவாக்குவதும் எம்முன் உள்ள முக்கிய சவால்கள் ஆகும்.

***கேள்வி :*** தங்கள் அமைச்சின் முக்கிய பணிகளான புனர்வாழ்வு, அகதிகள் தொடர்பான பணிகள், மீளக்குடியமர்வு ஆகியனவற்றை யுதத்தம் நடந்துகொண்டிருக்கும்போது பூரணமாக நிறைவேற்ற முடியாது அல்லவா? உண்மையில் உங்களது பணிகளைப் பூர்த்திசெய்ய யுத்தம் முடிவடைந்த பின்னரும் குறிப்பிடத்தக்களவு காலம் எடுக்கும் இல்லையா?

***பதில் :*** மிகவும் சிக்கலான பிரச்சினை. இவை அனைத்தையும் பூரணமாக நிறைவேற்ற வேண்டுமாயின் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவந்த பின்னரும் குறிப்பிடத்தக்களவு காலம எடுக்கும். அது உண்மையே. ஆனால் இதற்கிடையில் பல நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். வன்னிப் பகுதியில் சுமார் 5 லட்சம் அகதிகள் இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களில் பலர் கடநத 20 வருடங்களாக மிகவும் கடினமான வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றனர். எனவே யுத்தம் முடிவடையும்வரை இந்த அப்பாவி மக்களின் அடிப்படை வசதிகளை வழங்காதிருக்க முடியுமா? உண்மையில் ஒரு புறத்தில் சமாதானத் தீர்வினைக் காண்பதற்கு அதிஉச்ச முயற்சிகளை மேற்கொள்வது, மறுபுறத்தில் இந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பது ஆகியனவே இன்று எமது முக்கிய பணிகளாகும்.

***கேள்வி :*** தேர்தலுக்கு முன்னரே வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்போம் என ஐ.தே.கட்சியினர் கூறினர். தற்போது அதே கட்சி ஆட்சிக்கு வந்துள்ளது. அரசியல் தீர்வுகாண்பது தொடர்பாக நீங்கள் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் என்ன?

***பதில் :*** உண்மையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நாளில் தீர்வினைக் காணமுடியாது. இந்தப் பிரச்சினையின் பின்னணியில் இரு தரப்பினர் உள்ளனர். எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமாயின் இரு தரப்பினருக்குமிடையில் அன்னியோன்யப் புரிந்துணர்வு உருவாகவேண்டும். அதன் பின்னரே பரந்த அளவில் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இங்கு இருதரப்பாரும் புரிந்துகொள்ளவேண்டிய அடிப்படையான - முக்கியமான - விடயம் ஒன்றுள்ளது. பிளவுபடாத ஒரு நாடு என்ற அடிப்படையிலேயே பேச்சுகள் ஆரம்பிக்கப்படவேண்டும் - மேற்கொள்ளப்படவேண்டும் - முடிவு காணப்படவேண்டும். நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் அநியாயம் ஏற்படாத விதத்தில் - அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கப்படவேண்டும். பருத்தித்துறையில் இருநது டொன்றா முனை வரையும் வாழும் மக்கள் அனைவரும் சுதந்திரமாக, அச்சம், சந்தேகமின்றி, எதுவித வேறுபாடுகளுமின்றி வாழும் உரிமையை உறுதிப்படுத்தும் விதத்தில் இறுதித்தீர்வு அமையவேண்டும்.

***கேள்வி :*** இதற்கு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடையக் காரணமாக இருந்த காரணிகளில் வெளிப்படையாகப் பேச்சுக்களை ஆரம்பித்ததும் ஒன்று என நீங்கள் நம்புகிறீர்களா?

***பதில் :*** உண்மைதான். பத்திரிகையாளர்கள் மற்றும் தொலைக்காட்சி, கமெரா ஆகியனவற்றின் முன்னிலையில் இப்படிச் சிக்கல் நிறைந்த பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. அதற்காக, எடுக்கப்படும் இறுதித் தீர்வை அந்தரங்கமாக வைக்க வேண்டும் என்பதல்ல. முன்னர் இடம்பெற்ற சமாதானப் பேச்சுகள் தோல்வியடைய இதுமட்டும் காரணமில்லை. உண்மையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண யாரை ஈடுபடுத்தினார்? அவரது வீட்டை அமைத்த கட்டடக் கலைஞர், அவரது தனிப்பட்ட கணக்காளர் மற்றும் அவரது செயலாளர் ஆகியோரையே ஜனாதிபதி நியமித்திருந்தார். நாட்டில் லட்சக்கணக்கான மக்களுடன் தொடர்புடைய பிரச்சினைக்கு - இவ்வளவுதூரம் மிகவும் சிக்கலான பிரச்சினைக்கு - தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதியால மேற்கொள்ளப்பட்ட இத்தகைய நடவடிக்கைகள் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிவிட்டன என்பதே எனது எண்ணமாகும்.

***கேள்வி :*** கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுகள் தோல்வியில் முடிவுற்றன. பின்னர் மூன்றாம் தரப்பின் தேவை உணரப்பட்டது. இவ்விடயத்தில் நோர்வே அரசின் ஈடுபாட்டை நாம் கருத்திற்கொள்ளவில் லை. இவ்வாறான பின்னணியில் விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிக்கப்படும் பேச்சுகளை என்ன அடிப்படையில் மேற்கொள்ளலாம் என நீங்கள் கருதுகிறீர்கள்?

***பதில் :*** இங்கு இந்தியாவின் எண்ணங்களையும், நம்பிக்கைகளையும் நாம் முதலில் கவனத்திற்கொள்ள வேண்டும். எமது அயல்நாடு இந்தியா. மேலும் இந்தப் பிராந்தியத்தில் பலம்மிக்க நாடு. எனவே இந்தியாவின் எண்ணம் எமக்கு முக்கியமானது. அதுமாத்திரமன்றி இந்தப் பிரச்சினை இந்தியாவுக்கும் ஒரு தீர்க்கமான பிரச்சினையாகும். இந்தியப் பிரதமர் ஒருவர் இந்த விடயம் காரணமாக உயிரிழக்க நேரிட்டுள்ளது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்தியா கூறும் விதததில் நாம் நடக்கவேண்டும் என நான் கூறவில்லை. இருப்பினும் அவர்களது கருத்து எமக்கு மிகவும் முக்கியமானது. இதனாலேயே எமது பிரதமர் பதவியேற்றவுடன் தனது முதல் வெளிநாட்டு விஜயத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டார்.

நோர்வே அரசு இவ்விடயத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதைப் பாராட்டவேண்டும். எமது அரசு இது தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கும்.

***கேள்வி :*** இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் முயற்சியில் ஐ.தே.க. அரசு எவ்வளவு தூரம் முயற்சிகளை மேற்கொண்டாலும் நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராக இருக்கும் நிலையில், குறிப்பாக கடந்த தேர்தல் பிரசாரங்களின்போது விடுதலைப் புலிகளை யுத்தத்தின் மூலமே தோற்கடிக்க முடியும் எனத் தெரிவித்துள்ள நிலையில், இந்த ஜனாதிபதியின்கீழ் நாட்டின் நிர்வாகம் இருக்கும்வேளையில் அரசியல் தீர்வுக்கான சாத்தியங்கள் உள்ளனவா?

***பதில் :*** இது பாரதூரமான பிரச்சினைதான். இருப்பினும் எமது நாட்டிற்காக எமது கடமைகளை நாம் கைகழுவிவிடத் தயாராயில்லை. இந்தநேரத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா இந்தப் பிரச்சினையின் தாற்பரியத்தைப் புரிந்து கொண்டு பொறுப்புடன் செயற்படுவார் என நான் எதிர்பார்க்கிறேன்.

***கேள்வி :*** வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படும் வேளையில் புதிதாக உருவாகக் கூடிய தடைகள் அல்லது கஷ்டங்கள் யாவை?

***பதில் :*** நான் சந்தித்த ஒருவர் இவ்விடயம் தொடர்பாக நல்ல பதிலையும் விளக்கத்தையும் தந்தார். அவர் வேறுயாருமல்ல. தென் ஆபிரிக்க மக்களின் விடுதலைக்காகப் போராடிய நெல்சன் மண்டேலாவுக்கு உறுதுணையாக விளங்கிய பேராயர் டெஸ்மன் டுட்டுவே அவராகும். நான் அவரைச் சந்திக்க தென் ஆபிரிக்கா சென்றவேளையில் எமது நாட்டில் உருவாகியுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்படவேண்டிய நடிவடிக்கைகள் குறித்து அவரிடம் வினவினேன்.

"பாருங்கள், எமது நாட்டிலுள்ளவர்கள் கறுப்பு மற்றும் வெள்ளை இன மக்களே. அவர்களிடையே அமைந்துள்ள அடிப்படை மாற்றங்களைக் கவனியுங்கள். சமூக, கலாசார மற்றும் மத வேறுபாடுகள் மாத்திரமன்றி, கறுப்பு - வெள்ளை நிற பேதமும் உண்டு. ஆனால் உங்கள் நாட்டைப் (சிறிலங்கா) பாருங்கள். சிங்கள, தமிழ் மக்களிடையே இவ்வளவு வேறுபாடுகள் உள்ளனவா? அவர்களது சமூக, கலாசார, மத விடயங்களில் எவ்வளவு ஒற்றுமைகள் உள்ளன. உண்மையில் சிங்களவர்கள், தமிழர்கள் என பார்த்த மாத்திரத்தில் வேறுபாடுகளைக் காணமுடியாது" எனத் தெரிவித்த பேராயர் என்னிடம் வினாவெழுப்பினார். "ஏன் இந்த இரு இனங்களுக்குமிடையே சமாதானத்தை உருவாக்க முடியாது" என அவர் கேட்டபோது என்னால் பதிலளிக்க முடியவில்லை. பேராயர் தொடர்ந்தார், "உந்த சமாதானத் திட்டங்களை வீசி எறியுங்கள். அவற்றால் பயன் ஏதுமில்லை. அவற்றை மறநதுவிடுங்கள்" - என்றார். அப்போது நாங்கள் என்ன செய்யலாம் என நான் வினவியபோது "நாளை பிரபாகரன் தமிழீழம் பற்றிய எண்ணததைக் கைவிடுவதாகவும், ஆயுதங்களைக் கீழே வைப்பதாகவும் பகிரங்கமாக அறிவித்தால் சிங்கள மக்கள் அதை நம்புவார்களா? இலலை. ஒருபோதும் நம்பமாட்டார்கள். அதேபோலவே நாளை வடக்குக் கிழக்கை இணைத்து தனியான அரசை வழங்குவதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்தால் அதை உண்மைதான் என உங்கள் நாட்டிலுள்ள தமிழ் மக்கள் நம்புவார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா? இல்லை. அதை உண்மை என அவாகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

"அப்படியானால் என்னதான் பிரச்சினை?' பேராயர் மீண்டும் என்னிடம் வினவினார். "இந்தப் பிரச்சினையை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்" என நான் பேராயரிடம் கேட்டபோது, "இநத இரு இனங்களும் ஒன்றின்மது ஒன்று நம்பிக்கைகொள்ளவில்லை. தென் ஆபிரிக்காவில் வெள்ளையர் மற்றும் கறுப்பர்களிடையே கட்டி எழுப்பப்பட்ட நம்பிக்கை ஸ்ரீலங்காவில் இரு இனங்களுக்கிடையே உருவாகவில்லை. எனவே நீங்கள் என்ன செய்யவேண்டும்? உங்கள் நாட்டிற்குச் சென்று இரு இனங்களுக்குமிடையே நம்பிக்கையைக் கட்டி எழுப்புங்கள். ஆனால் ஒன்று, இவ்விடயத்தில் முன்நிற்பவர்கள் ஆரம்பத்தில் பல சவால்களைச் சந்திக்க நேரிடலாம். அதாவது யாராவது இம்முயற்சியில் இறங்கும்போது அவர் சிங்களவர் எனில் அவரை விடுதலைப் புலிகள் சந்தேகிப்பர். அதேபோலவே சிங்கள மக்கள் தமக்குத் துரோகமிழைக்க முனைகிறார்கள் எனக் கருதுவர்.



"அவர் தமிழனாக இருந்தால் இதே சந்தேகம் மாறுபட்டிருக்கும். இதன்படி அவர் யாராய் இருப்பினும் இரு இனங்களுக்கிடையே சகஜவாழ்க்கையை உருவாக்க முயற்சிகளை மேற்கொள்பவர் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நேரிடும். அத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நீங்கள் தயார் எனில் நீங்கள் உங்கள் நாட்டிற்குப்போய் சிங்கள - தமிழ் மக்களிடம் சென்று இந்த முயற்சியை மேற்கொண்டு பாருங்கள். அவ்வாறான நம்பிக்கை உருவாகும் வரை முன்வைக்கப்படும் எந்தவோர் அரசியல் தீர்வோ அல்லது சமாதானப் பேச்சுகளோ வெற்றிபெறமாட்டா" - எனப் பேராயர் டெஸ்மன் டுட்டு தெரிவித்தார்.

உண்மையில் இன்று நாங்கள் எதிாநோக்கும் உண்மையும் அதுவே. நாங்கள் வெற்றிகொள்ள வேண்டிய சவாலும் அதுவே.

★

# திருமறைக் கலாமன்றம் இணையத்தில் சேர்ந்தது

இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும நீண்டகாலமாக கலை வழியாக இறை பணியாற்றிவரும் திருமறைக் கலாமன்றம் தனது வளர்ச்சிப் பாதையில் ஒரு முக்கிய கட்டமாக இம்மாதம் 15ஆம் திகதிமுதல் இணையத்தளத்தினுள் பிரவேசிக்கின்றது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் உட்பட. இலங்கையின் பல பாகங்களிலும் செயற்படும் திருமறைக் கலாமன்றங்களினதும், வெளிநாடுகளில் இயங்கும் திருமறைக் கலாமன்றங்களினதும் கலை, கலாசார, அரங்கசார் செயற்பாடுகள் அனைத்தையும் உலகெங்கும் வாழும் அனைத்து மக்களும் கண்டுகளிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

திருமறைக்கலாமன்ற செயற்பாடுகளை இணையத்தளத்தினூடாகப் பார்வையிட விரும்புவோர் திருமறைக் கலாமன்றத்தின் இணைய முகவரியாகிய www.cpateam.com என்ற முகவரியுடன் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் தொடர்புகொண்டு பார்வையிடலாம் என யாழ்.திருமறைக் கலாமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-8)

# கிளிநொச்சி மாவட்டத்தில் நோய்த்தடுப்பு பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் பிரதேச ரீதியாக வயிற்றோட்டம் பரவாதிருக்கவும், டெங்கு நோய்க்கெதிரானதுமான சுகாதார வேலைத்திட்டங்கள் கடந்த வியாழன் முதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. கரைச்சி மற்றும் கண்டாவளைப் பிரதேசங்களில் இவ் வேலைத்திட்டம் ஆரம்பமாகித் தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு நடைபெறவுள்ளதாகவும் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சயந்தன் அவர்கள் தெரிவித்துள்ளார். (ம)

# யாழ். மாநகரசபை பொன்விழா நிகழ்வுகள் திட்டமிட்டபடி நடக்கும்

யாழ்.மாநகர சபையின் பொன் விழா நிகழ்வுகள் திட்டமிட்டபடி நடைபெறும் எனப் பொன்விழா ஏற்பாட்டுக் குழுத் தலைவர் க.கிங்ஸ்லி கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொன்விழாவை தற்போது இருக்கும் மாநகரசபையைக் கலைப்பதற்கு முன்னர் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இதில் எந்தவித மாற்றமும் கிடையாது. பொன்விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த விளையாட்டு நிகழ்வுகளும் திட்டமிட்டபடி நடைபெறும். பொன்விழா சிறப்புமலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

இம்மலருக்கான ஆக்கங்களை அனுப்பவிரும்புவோர் 'மாநகரசபை பொன்விழா ஏற்பாட்டுக் குழுத் தலைவர், மாநகர சபை, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு கடிதமூலம் நேரடியாகவோ விரைவாக அனுப்பவேண்டும் என்றும் -

இப்பொன்விழா கொண்டாட்டங்களுக்கென வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநரிடமிருந்து மாநகர சபை நிர்வாகம் 10 லட்சம் ரூபாவைக் கோரியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார் (ம-8)

# தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தோர் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது இடம்பெற்ற அனர்த்தத்தில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக யாழ்.முற்றவெளிப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி முன்றிலில் அஞ்சலி நிகழ்வொன்றை நடத்துவதற்கு புளொட் அமைப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இவ் அஞ்சலி நிகழ்வில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மதகுருமார்கள், கல்விமான்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு புளொட் அமைப்பு கேட்டுள்ளது. (ம-8)

# தென்மராட்சிப் பகுதியில் நுளம்புத் தொல்லை தீவிரம்

தென்மராட்சி,ஜன.9

ஒன்றரை வருடங்களின் பின்னர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிய மக்கள் அங்கு நுளம்புக் கடியினால் அல்லலுறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடியிருப்புகள் உள்ள பகுதியில் பற்றையாக வளர்ந்துள்ள செடிகள் வெட்டப்படாமல் குவிந்து காணப்படும் வேலி மரங்கள், வளவுகளுக்குள் பரவிக் காணப்படும் குப்பைகள் ஆகியவற்றினால் அங்கு நுளம்புத் தொல்லை அதிகளவில் இருப்பதாகவும் -

இதனால் வளவுகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபடுவோர் நுளம்புக் கடியினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும்-

தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் பகுதிகளில் மலேரியா தடுப்புப் பிரிவினர் மூலம் மலத்தியோன் தெளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் யாழ். பிராந்திய மலேரியா தடுப்புப் பிரிவினரிடம் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-117)

# மேலும் இரு பாடசாலைகள் மீண்டும் சொந்த இடங்களில்!

தென்மராட்சி,ஜன.9

பருத்தித்துறை தம்பசிட்டியில் உள்ள போரூட் நிறுவன கட்டடத்தில் இயங்கி வந்த குடமியன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை கடந்த வாரம் அதன் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளதையடுத்து தற்போது பருத்தித்துறை ஓராம் கட்டையடியில் தனியார் கல்வி நிலையமொன்றில் இயங்கிவந்த முகாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நேற்றுமுன்தினம் தொடக்கம் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை -

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் இயங்கிவந்த யார்க்கரு விநாயகர் ஆலய மண்டபத்தில் சேர்ரன பற்று கணேசா வித்தியாலயமும், அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இயங்கி வந்த கொற்றாவத்தை ஸ்ரடி சேர்க்கிள் கல்வி நிலையத்தில் தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை ஒன்றையும் இயங்கவைக்க முயற்சி எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-117)



நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையிலான மெய்வன்மைப்போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. வெற்றியீட்டிய வீராங்கனைகளுக்கு யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பதனைக் காணலாம். (ம-180)

## இலங்கை இனப்பிரச்சினை விவகாரம்:

# நோர்வேயின் மத்தியஸ்தத்தில் இந்தியாவின் பங்களிப்பு என்ன?

## வாஜ்பாய் முடிவு செய்ய வேண்டும் என்கிறார் கருணாநிதி

சென்னை,ஜன.9

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் நோர்வே அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ள மத்தியஸ்த முயற்சிகளுக்கு இந்திய அரசின் பங்களிப்பு எவ்வாறு அமையவுள்ளது என்பது தொடர்பாக பிரதமர் வாஜ்பாய் தெளிவான முடிவு ஒன்றை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு கோரியுள்ளார் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி இது தொடர்பாக சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் பிரதமர் வாஜ்பாய் எந்த முடிவை எடுத்தாலும் அந்த முடிவு இந்தியாவுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் நன்மை பயக்கக்கூடியதாக அமைய வேண்டும் என்பதை அவர் கவனத்தில் எடுத்து செயல்பட வேண்டும்.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்து மத்திய அரசாங்கத்தால் எடுக்கப்படும் முடிவுகளை திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதுமே ஆதரித்து வந்துள்ளது.

- எனவும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ம-6-ரி)

## விபத்தில் காயம்

தென்மராட்சி,ஜன.9

அல்வாய் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்கள் விபத்தில் ஒருவர் வலதுகாலில் விரல் ஒன்றை இழந்தார்.

பருத்தித்துறை டிப்போ பஸ் சாரதியான கே.அருமைத்துரை (வயது 50) என்பவரே கால் விரலை இழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த இவர் தற்போது மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். (ம-117)

## பருத்தித்துறையில் குல்லாப் படகு கரையொதுங்கியது

தென்மராட்சி,ஜன.9

பருத்தித்துறை கற்கோவளம் கடற்கரையில் இந்திய நாட்டின் குல்லாப் படகு ஒன்று அநாதரவாகக் கரையொதுங்கி இப்பகுதி மீனவர்களால் மீட்கப்பட்டு கரையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரம்பினால் செய்யப்பட்டுள்ள இந்தக் குல்லாப்படகைப் பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.(ம-117)

## கிரனேட்டுக்கள் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜன.9

பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் கோப்பாய் கிழக்கில் 8 கிரனேட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தக் குண்டுகளை அழிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பலாலி பொலீஸாரினால் யாழ்.நீதிமன்றில் நேற்று மனுச்செய்யப்பட்டதை அடுத்து பலாலியில் உள்ள இராணுவ பொறுப்பதிகாரியின் கண்காணிப்பில் கைக்குண்டுகளை அழிக்குமாறும் பின்பு அது தொடர்பான அறிக்கையை மன்றுக்குச் சமர்ப்பிக்குமாறும் யாழ்.நீதிவான் இதவிக்ஸ்ராஜா பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ம-10)

## வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார வெள்ளி நிகழ்வாக கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியைச் சார்ந்த ஆசிரியை திருமதி செ. ஜெயகௌரி அவர்களின் இன்னிசை நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் அறிமுகவுரையை ஆசிரியர் டி.எம்.வேதாரணியம் நிகழ்த்த உள்ளார். (ம)

## கருத்தரங்கு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞானப் பிரிவினரின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் கருத்தரங்குத் தொடரில் ஏழாவது கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞானப் பிரிவின் தலைவர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் பொருளியற்றுறைத் தலைவர் வி.பி.சிவநாதன் 'யாழ்ப்பாணத்தின் இன்றைய பொருளாதார நிலைமைகளும் அவை எதிர்நோக்கும் நெருக்கடிகளும்' எனும் பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார். (ம)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவி

தென்மராட்சி,ஜன.9

வடமராட்சிப் பிரதேசத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட நான்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 150க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தினர் படுக்கை விரிப்புகள், தரையில் விரிக்கும் விரிப்புகள ஆகியவற்றை வழங்கியுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தும்பளை லூர்த்துமாதா தேவாலய முகாம், துன்னாலை வடக்கு கொடிக்காடு முகாம், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் கரவெட்டி கிழக்கு செங்குந்தர் முகாம், கரவெட்டி குமரனகுளம் முகாம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களுக்கே உதவிப் பொருளகள் வழங்கப்பட்டதாக துன்னாலை வடக்கு கிராம அலுவலர் கே.எஸ்.சிவராசன் தெரிவித்தார். (ம-117)




'ஆஸ்துமா' (தொய்வு) நோய்க்கான சிகிச்சை வழிமுறைகள் தொடர்பான சித்தமருத்துவக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கருத்தரங்கில் கலந்துகொண்ட லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் செ.ஞானராஜா ஆரம்பவுரை நிகழ்த்துகிறார். அருகில் லயன் சீமாட்டி மிதிலைச்செல்வி சிறிகாந்தன், சிவா நறுமணப் பூங்கா உரிமையாளர் வு.குருநாதசிவம் மற்றும் பிரமுகர்கள் காணப்படுகின்றனர். (ம-7)

# திருமறைக் கலாமன்றக்குழு தெற்குக்குக் கலைப்பயணம்

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின சிறுவர் கலைக்கூடத்தைச் சேர்ந்த 30இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் அடுத்த வாரம் அளவில் கல்வி, கலாசார சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு தென்னிலங்கை செல்லவுள்ளனர்.

தென்னிலங்கையில் இவர்கள் இரண்டுவாரகாலம் தங்கியிருந்து பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தரிசிப்பதுடன் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தவுள்ளனர். அண்மைக்காலங்களில் யாழ்.திருமறைக்கலாமன்றம் தென்னிலங்கைக்குப் பல்வேறு கலைப் பயணங்களை மேற்கொண்டுவருவது தெரிந்ததே. (ம-8)

# 96ஆம் ஆண்டு கைதான இளைஞர் நீர்கொழும்புச் சிறைச்சாலையில்

## அங்கிருந்துவந்த ஒருவர் தெரிவிப்பு

1996ஆம் ஆண்டு காணாமற்போன இளைஞர் ஒருவர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தற்பொழுது இருக்கிறார் என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

96ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி வெளிவாரிப் பட்டப் படிப்புப் பரீட்சைக்கான பதிவினை மேற்கொள்வதற்காகக் கைதடியில இருந்து யாழ்பல்கலைக்கழகத்துக்கு சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொழுது செம்மணிப் பிள்ளையார் கோயிலடியில் காணாமற்போன கைதடி வடக்கைச் சேர்ந்த கணேச சர்மா ஸ்ரீராம் (வயது 26) என்பவரே சிறையில் இருப்பதாக உறவினர்களுக்குத் தெரியவந்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் 98ஆம் ஆண்டு யாழ்.பஸ் நிலையப் பகுதியில் வைத்துப் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்பு நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு, கடந்த மே மாதம் 18ஆம் திகதி விடுதலை செய்யப்பட்ட யாழ்ப்பாணம், சிவன் கோயிலடியைச் சேர்ந்த குமரவேல் லட்சுமி (வயது 36) என்ற பெண்மணியே குறிப்பிட்ட இளைஞர் சிறையில் இருப்பதுபற்றி உறவினர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் உள்ள அந்த இளைஞர் தான் அங்கு இருப்பது குறித்துத் தனது பெற்றோரிடம் தெரிவிக்குமாறு கூறியதாகவும் -

சிறையில இருந்து விடுதலையாகி கடந்த ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் இங்கு வந்த பின்பு கைதடிக்குச் சென்று அந்த இளைஞனின் பெற்றோரைத் தேடிய போதும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாத காரணத்தினால் அவர்களின் உறவினர்களிடம் தான் இந்த விடயத்தைத் தெரிவித்ததாகவும் -

இதன்பின்பு பெற்றோர் அண்மையில்த்தான் தன்னைச் சந்தித்துச் சகல விவரங்களையும் கேட்டறிந்து கொண்டதாகவும் -

லட்சுமி தெரிவித்தார்.

இவரது தகவல்களை அடுத்தே இதுகுறித்துப் பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர். (ம-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

செங்கரும்பு மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பேரம்பலம் மாஸ்ரர், தலையாழி, கொக்குவில். (96832)

வீட்டுப் பாவனைக்குரிய மரத் தளபாட வகைகள், கடைப் பாவனைக குரிய மரத்தளபாட வகைகள், 8X8 கண்ணாடி சோக்கேஸ் முற்றாக முதிரைப பலகையில் உருமாற்றுச் செய்யப்பட்டது. மேலாகவும், கீழாகவும் இரண்டாகப் பிரித்துப் பாவிக்ககூடியதும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கந்தையா சர்வானந்தன், புத்தூர் வடக்கு, நவக்கிரி, புத்தூர். (96822)

நல்ல நிலையிலுள்ள சுருதிப் பெட்டி, வயலின் விற்பனைக்கு உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (96845)

## காணி விற்பனைக்கு

இல.11, கற்பகவிநாயகர் வீதி, கச்சேரி - நல்லூர் றோட், யாழ்ப்பாணத்தில் 2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு.சிவப்பிரகாசம், யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம், 127, K.K.S. வீதி,யாழ்ப்பாணம். T.P: இல. 2587. (96731)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

Doberman Pinscher நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (96846)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (96618)

புறொயிலர்(1 kg 140/-), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். 2 மாதம் நிரம்பிய சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. S.கண்ணா, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (96850)

## ENGLISH CLASSES

O/L, A/L, G.A.Q., B.A. மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்குமான ஆங்கில வகுப்புகள் ஆரம்பமாகின்றன. அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தொடர்பு: K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (96688)

## தவறிவிட்டது

திருநெல்வேலியைச் சேர்ந்த க. முத்துக்குமாரு என்பவருடைய மூக்குக கண்ணாடி கவருடன் ஆஸ்பத்திரி வீதி, வர்த்தக வங்கிக்கும், கஸ்தூரியார் வீதி ரூபிநகை மாளிகைக்கும் இடைப்பட்ட தூரத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரூபிநகை மாளிகை 111/1,கஸ்தூரியார் வீதி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P No. 2828, 3376. (96864)

## கூட்டம்

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் 34ஆவது பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசாரமண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் மங்கள விளக்கேற்றி கூட்டத்தை ஆரம்பித்துவைப்பார். பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபைப் பிரதி முதல்வர் செ. கந்தையன் கலந்துகொள்வார். (ம-8)

## மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

தென்மராட்சி,ஜன.9

தென்மராட்சி தெற்குப் பகுதியான தனங்களப்புத் தொடக்கம் நாவற்குழி வரையிலான பகுதிகளைச் சேர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இப்பகுதி விவசாய சம்மேளனங்களின் தலைவர் மா.லீலாவினோதன் இந்துசமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனை மகஜர் மூலம் கோரியுள்ளார்.

பொதுத் தேர்தலில் வென்று ஐதே. கட்சி ஆட்சி அமைத்ததும் எமது பகுதி மக்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதாக தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கியதை தமது மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-117)

---

# A/L 2004 கலை, வர்த்தகம்

ஆரம்பம: 19-01-2002

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளவும்.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.

நிர்வாகி
S.அருள்நங்கை

---

# கண்ணீர் அஞ்சலி

எங்கள் சகோதர உத்தியோகத்தர்

செல்வி ம.மீனலோஜினி

*(கதிரியக்கவியலாளர், ஆதார வைத்தியசாலை, மந்திகை)*

அவர்களின் பாசமிகு தந்தையார்

## இராசரத்தினம் மகேந்திரராசா

அவர்கள் காலமானதையிட்டு துயர் பகிர்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்,
யாழ்.போதனா வைத்தியசாலை
(96862)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27 - 05 - 1940



மறைவு 10 - 12 - 2001

## திருமதி சின்னத்துரை கமலாதேவி

தாயே!

எம் குடும்பத்தின் ஒளி விளக்கானீர்
பாசத்தையும் பரிவையும் எமக்கூட்டினீர்
பொறுமையின் பொக்கிஷமாய்
நேர்மையின் உறைவிடமாய் விளங்கினீர்
எம் தாயே! உமது அன்பும் அரவணைப்பும்
என்றும் எம் உள்ளத்தில் நிறைந்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சி நிற்கும்:

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*உடுவில் வீதி,*
*மானிப்பாய்.* (96860)

---

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி காளிதாசன்

(ஓய்வுபெற்ற லிகிதர்)

சோனக தெருவைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி காளிதாசன் கடந்த (03.01.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*687/28A, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.* (96853)

*தகவல்:-*
கா.பரமேஸ்வரி
(மனைவி).

## சோமு அல்பிரட் ஐயாத்துரை

புதுவீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சோமு அல்பிரட் ஐயாத்துரை நேற்று (08.01.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பேரிராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சோமு - றோசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சீமான்பிள்ளை - திவ்வியம் தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், கனகமணி, ராசமணி, துரைரெட்ணம் மற்றும் புஸ்பமணி (பொந்தா) ஆகியோரின் அன்புச் சகோதரனும்; விமல், யோகராணி, வனிதா, லலிதா, திலனா, செல்வதி, பிரபாகரன் (தம்பினா), கிருபாகரன் (பாபு), சித்திரா, காலஞ்சென்ற அகிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராசா, ரெட்ணசிங்கம், நல்லைநாதன், சுரேஸ், அன்ரன் ஆகியோரின் மாமனாரும், அனி, லீலா, பிள்ளை (சிசிலியாமணி) ராஜேஸ்வரன், காலஞ்சென்றவர்களான சின்னக்கிளி, டொன்பொஸ்கோ ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இன்று (09.01.2002) புதன்கிழமை பிற்பகல் 3 மணி (புதிய நேரம்) கிறிஸ்துஅரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26/3, புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (966861)

தகவல்:
கிருபாகரன (பாபு)
*(மகன்)*

---

# துணைக்கு ஆள் தேவை

ஓரளவு வயது வந்த தம்பதியரைக் கூடவிருந்து துணையாகப் பராமரித்துப் பார்க்கக்கூடிய ஓர் ஆள் (பெண்) தேவை.

(வீட்டு வேலைகள் எதுவும் செய்யத் தேவையில்லை. வயது 20-35).

*விரும்புவோர் நற்சான்றுப் பத்திரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்.*

விளம்பர இல. 1429,
மே.பா. உதயன், யாழ்ப்பாணம்.

(96813)

---

# சேவை நலன் பாராட்டு

அகவை அறுபதில் சேவை நிறைவெய்தும்
யா/யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஆசிரியை



## திருமதி தங்கமுத்து சிவலிங்கம்

யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் 05-03-1967 தொடக்கம் சேவையாற்றிய திருமதி தங்கமுத்து சிவலிங்கம் அவர்கள் 08.01.2002இல் இருந்து ஓய்வுபெறுகிறார். இவர் சிறந்த கைப்பணி ஆசிரியையாக மட்டுமன்றி மாணவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான கல்வியை ஆர்வத்துடன் பயில உள்ளத்துடிப்போடு தம்மை அர்ப்பணித்து அவர்களின் ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றில் மிகுந்த அக்கறை காட்டியவர். பகுதித் தலைவராகவும் கடமையாற்றினார். இவர் எமது கல்லூரியில் தொடர்ந்து 34 வருடகாலம் ஆற்றிய கல்விச் சேவை மிகவும் பாராட்டுக்குரியது. அவரும் அவரது குடும்பத்தினரும் எதிர்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ இறைவனருள்புரிய வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், அலுவலக ஆளணியினர்,
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி.
(96852)

---

# JAPAN KARATE-DO YOHAN MARTIAL ARTS SHOTOKAN (SRI LANKA)



*இடமிருந்து வலமாக*

T.ஜெயச்சந்திரன் (முதலாம் கறுப்புப்பட்டி)
T.ஜீவதாஸ் (முதலாம் கறுப்புப்பட்டி)
N.உமாகாந்தன் (இரண்டாம் கறுப்புப்பட்டி)
N.இலட்சுமிகாந்தன் (முதலாம் கறுப்புப்பட்டி)

J.K.Y.M.A யின் இயக்குநரும் பரீட்சகருமான N.உமாகாந்தன் (BLACK 2) அவர்களால் இம்மாணவர்கள் தரம் உயர்த்தப்பட்டதை சக மாணவர்கள்

பாராட்டி வாழ்த்துகின்றார்கள்.

மணற்புலம், அளவெட்டி கிழக்கு.
(96856)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கல்விகற்கும் சக மாணவன்

க.சுரேஷ்

அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் பழனிவேல்தேவர் கந்தசாமி

அவர்களின் மறைவினால் நாம் பெரிதும் துயரடைகின்றோம். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

2002 கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்கள்,
யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி
(96858)

# ரத்வத்தையின் புத்திரர் இருவரையும் உடன் கைது செய்யவேண்டும்

## நாடாளுமன்றில் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு,ஜன.9

கண்டி, மடவளையில் பத்து முஸ லிம் இளைஞர்கள் கொலை செய் யப்பட்ட சம்பவத்தில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் இரு மகன்மாரும் உடந்தையாக இருக்கின்றனர் என்று உறுதியாகிவிட்டது. எனவே உடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் இப்படிக் கோரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

மடவளைச் சம்பவத்தில் அனு ருத்தவின் மகன்மார் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது உறுதி யாகிவிட்டது. இங்கு அமர்ந்திருக்கும் அனுருத்த ரத்வத்தைக்கும் அதில் தொடர்பு உண்டு. அதை மறுக்க முடியாது.

உடன் அவரின் மகன்மாரை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் - என்றார். (க-3)

## ரணிலின் பதவியேற்பைப் படம் எடுக்கத் தடை

# 10 லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி தொலைக்காட்சி நிறுவனம் வழக்கு

## ஜனாதிபதியின் செயலரும் பிரதிவாதி

கொழும்பு,ஜன.9

முக்கியத்துவம் வாய்ந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதவியேற்பு வைபவத்தை ஒளிப்பதிவு செய்வதற் காக ஜனாதிபதி மாளிகைக்கு சென்ற எமது குழுவினரைத் தடுத்து நிறுத் தியமை அடிப்படை மனித உரிமை மீறலாகும.

இதற்காக பத்து லட்சம் ரூபா நஷ்டஈடு எமக்கு வழங்கப்பட வேண் டும்.

- இவ்வாறு கோரி ரி.என்.எல் .தொலைக்காட்சி நிறுவனத்தின் பொறுப்பதிகாரி எம்.எஸ்.டி.பெரேரா உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

பிரதமரின் பதவியேற்பு வைப வத்தை ஒளிப்பதிவு செய்ய சென்ற தம்மை ஜனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளே செல்ல விடாது தடுத்து நிறுத்தியதாகவும்-

இதனால் குறித்த நிகழ்ச்சியை தம்மால் ஒளிப்பதிவு செய்யமுடி யாமல் போய்விட்டதாகவும் - அந்த மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கில் பிரதிவாதி களாக ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெண்டி மற்றும் ஜனாதி பதியின் பாதுகாப்புப் பிரிவின் பணிப் பாளர் நிஹால் கருணாரத்ன, தகவல தொடர்பு திணைக்களப் பணிப்பாளர் ஆரியருபசிங்க ஆகியோர் குறிப்பிடப் பட்டுள்ளனர். (க-6-ரி)

## ஐந்தாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தில் இருந்து பயணம் செய் வோர் இரவு 7.30 மணிக்கு பயணத் துக்காக சமுகம் தரவேண்டும்.

"கொழும்பிலிருந்து இரவு வந்து சேருவோரை வீடுகளுக்கு அனுப்பி வைத்தல் அல்லது உரிய இடத்தில் தங்க வைத்தல் போன்ற பணிகளை எனது அமைச்சே செய்யும்."

- இப்படி அமைச்சர் மகேஸ்வ ரன் கூறினார். (உ)

# வன்னிக்கான உணவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னிக்கு பொருள்கள் அனுப்ப படவில்லை. அங்குள்ள மக்கள் பட் டினி கிடக்கிறார்கள். அங்கு பொருள் களுக்கு பெரும் தட்டுப்பாடு உள் ளது என்று அமைச்சர் கூறினார்.

பட்டியல் ஒன்றைத் தூக்கிப் போட் டார் சூரியாராச்சி. அங்கு தாராளமாகப பொருள்கள் இருக்கின்றன என்று பட்டியலைக் காட்டினார். அமைச்ச ருக்கு வந்தது கோபம்.

இருவருக்கும் இடையில் சுடும் வாக்குவாதம் ஏற்பட்டது. சூரியா ராச்சி மாநாட்டில் இருந்து வெளியே றினார்.

மாநாட்டைத் தொடர்ந்த அமைச் சர் சூரியாராச்சியின் கடந்த கால நடவடிக்கைகளை கடுமையாக விமர் சித்தார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அனும தியோ, உதவியோ இன்றி வன்னிக்கு பொருள்களை அனுப்புவேன் என்று உறுதிபட அவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழ்பவர்களும் இலங்கை மக்கள் தான். அப்பகுதியை அபிவிருத்தி செய வதும் அவர்களுக்கு வேண்டிய அத் தியாவசிய சேவைகளை வழங்குவ தும் அரசின் கடமை. ஆனால் பிரத மர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அத்தியாவசிய சேவை கள் ஆணையாளர் நாயகம் முட்டுக் கட்டையாக இருக்கின்றார்.

வன்னிக்கு உடனடியாக 270 மெட் ரிக் தொன் அரிசியை கூ.மொ.வி. நிலை யம் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுத் துள்ளேன். இன்று இரவு 10 மெட்ரிக் தொன் அரிசி கொழும்பில் இருந்து நேரடியாகக் கொண்டு செல்லப்படும். எஞ்சிய 260 மெட்ரிக் தொன் அரிசி நாளைமறுதினம் அனுப்பி வைக்கப் படும் இனிமேல் அத்தியாவசிய சேவை கள் ஆணையாளர் திணைக்களத்தின் அனுமதிக்காகக் காத்திருக்க முடி யாது; அனுமதியைக் கோரப் போவ தும் இல்லை.

- இவ்வாறு அமைச்சர் கூறினார். (க-3)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வேத் தூதுக்குழு ஈடுபடும் எனத தெரியவருகின்றது.

அரசுடன் யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வது குறித்து விடுதலைப் புலிகள் சில ஆலோச னைகளை முன்வைத்திருக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை லண்ட னில் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை நோர்வேத் தூதுக் குழுவினர் சந்தித்தபோது இந்த ஆலோ சனைகளை அன்ரன் பாலசிங்கம் விவர மாகத் தெரிவித்திருந்தார்.

அவற்றை நோர்வேக் குழுவினர் இன்று இலங்கை அரசுத் தரப்பிடம் தெரிவிப்பர் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

இன்று கொழும்பு வரும் நோர் வேக் குழுவில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெலல் கிஸன், வெளிவிவகார ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், வெளிவிவகார அமைச்சு அதிகாரி செல்வி கேர்ஸ்டி றொம்ஸ்டால் ஆகியோர் இடம்பெறு கின்றனர்.

இந்தக் குழு கொழும்பிலிருந்து திரும்ப முன்னர் - அனேகமாக வெள் ளிக்கிழமையன்று - வன்னிக்குச் சென்று புலிகளின் தலைவர்களைச் சந்திக்கலாம் என்று ஒரு பேச்சடி பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (உ-6-ரி)


**31ஆம் நாள் நினைவு**

**கண்ணீர் அஞ்சலி**

கோண்டாவில் இந்துவின் ஆசிரியை
திருமதி வசந்தகுமாரி கமலச்சந்திரன் அவர்களின்
அன்புத் தந்தையும், பிரபல தவில்வித்துவானுமாகிய

**இரத்தினம் சண்முகராசா**

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த் திப்பதுடன் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை யும் தெரிவிக்கின்றோம்.

*யா/கோண்டாவில் இந்து ம.வி.,*
*கோண்டாவில்.*
(96877)
அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.


## மடவளை சம்பவம்; இன்று அடையாள அணிவகுப்பு

கண்டி,ஜன.9

மடவளையைச் சேர்ந்த 10 முஸ் லிம் இளைஞர்களின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக கைதாகியி ருக்கும் 30 சந்தேக நபர்கள் இன்று 9ஆம் திகதி தெல்தெனிய நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்ப டுவார்கள்.

இவர்களை அடையாளம் காணும் அணிவகுப்பு இன்று நீதிமன்ற வள வில் இடம்பெறவுள்ளது.

டிசெம்பர் 5ஆம் திகதி கட்டுகஸ் தோட்டை பல்லேதலவின்ன என்னு மிடத்தில் 10 முஸ்லிம் இளைஞர் கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என் பது தெரிந்ததே.

இந்த துப்பாக்கிச் சூட்டில் இருந்து தப்பிப் படுகாயமடைந்த இருவரும் மற்றும் ஒருவரும் சந்தேக நபர்களை அடையாளம் காண நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவிருக்கின்றனர்.

இந்த கொலைச் சம்பவம் தொடர் பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் இரு புதல்வர்களான லோகான் ரத்வத்தையும், சானுக்க ரத்வத்தையும் பொலீஸாரால் தேடப் பட்டு வருகின்றனர். (க)

## வரவேற்பு வைபவம்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டுள்ள பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயரை வரவேற்கும் வைப வம் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங் கில் நடைபெறவுள்ளது.

கலைப்பீட மூன்றாம் வருட மாண வர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வைபவத்தில் பிரதமவிருந் தினராக யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந் தரம்பிள்ளையும் சிறப்புவிருந்தின ராக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலமும் கலந்து கொள்வார்கள்.

முன்னாள் கலைப்பீடாதிபதி பேரா சிரியர் எஸ்.பாலச்சந்திரன் காலமா னதை அடுத்து பேராசிரியர் ப.கோபா லகிருஷ்ண ஐயர் கலைப் பீடாதிபதி யாக ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டிருந்தது தெரிந்ததே. (ம-6)

## வீதி துப்புரவு

குருநகர்,ஜன.9

கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயம் மீண்டும் ஆரம்பிக் கப்பட்டதைத் தொடர்ந்து சுவாமி யார் வீதியை துப்புரவு செய்யும் பணியில் யாழ்.மாநகரசபை சுத்தி கரிப்புத் தொழிலாளர்கள் நேற்று ஈடுபட்டனர். (க-51)


**லஷ்சுமி** இணுவில்
அஜித், மம்முட்டி, தபு, ஐஸ்வர்யா
நடித்த
**கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்**
தினசரி:- 10.30, 2.30 (ப.நே)
பொங்கல் வெளியீடு
**ஆனந்தம்**
(96880)

**ராஜா** யாழ்ப்பாணம்
இன்று முதல்
லிவிங்ஸ்ரன், வடிவேலு, விவேக்,
குஷ்பு, கனகா நடித்த
**விரலுக்கேத்த வீக்கம்**
(சிறந்த நகைச்சுவைச் சித்திரம்)
தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00
(C720092)

**நிரஞ்சனாஸ்** சங்கானை
கமல் (இரட்டை வேடம்),
மனீஷா, ரவீனா
மற்றும் பலர் நடித்த
**ஆளவந்தான்**
(ரீலீஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-20099)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல்
ராம்கி, ரம்யாகிருஷ்ணன்,
விவேக் மற்றும் பலர் நடித்த
**பாளையத்து அம்மன்**
(ரீலீஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (புதிய நேரம்)
(96866)





தென்பகுதியில் இருந்து வருகை தந்துள்ள ஸ்ரீலங்கா வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் மக்கி ஹசீம் யாழ்.வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் கே.பூரணச்சந்திரனிடம் தமது வருகையின் ஞாபகமாகச் சின்னம் ஒன்றை கையளிப்பதை படத்தில் காணலாம். *(படம்:-பொ.இராஜேஸ்வரன்)*

## கொழும்பு ஹோட்டலில் ஹெரோயின் சிக்கியது!

கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் இருந்து 27 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோ யின் போதைப் பொருள்கள் மீட்கப் பட்டுள்ளன.

திடீர் பரிசோதனை மேற்கொண்ட தேசிய போதைவஸ்து தடுப்பு பணி யக அதிகாரிகளே சுமார் 270 கிராம் ஹெரோயின் போதைவஸ்தை கைப் பற்றியுள்ளனர்.

இது ஆசிய நாடு ஒன்றில் இருந்து இந்த ஹோட்டலுக்கு கடததப்பட்டு எடுத்துவரப்பட்டிருந்த தாக விசாரனை கள் மூலம் தெரியவந்துள்ளது.

# நோர்வே ஏற்பாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**(Venue)** இந்தியாவைப் பயன் படுத்துவதை புலிகள் விரும்புகின்ற னர் என்றும் -

இந்தத் தகவல் நோர்வேக்குத் தெரி யப்படுத்தப்பட்டுள்ளதாகவும் -

நோர்வே இது குறித்து இலங்கை, இந்தியத் தரப்புகளுக்கு விரைவில் தகவல் தெரிவிக்கும் என தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் -

விடுதலைப் புலிகளின் வட்டாரங் கள் தெரிவித்ததாக அவர்களுடன் நெருங்கிய தகவல்கள் குறிப்பிட்டன.

இலங்கை அரசு - புலிகள் பேச்சு விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பை இரண்டு வழிகளில் புலிகள் எதிர்பாக்க கின்றனர்.

முதலாவது - பேச்சுக்காலத்திலும் அதற்கு முன்னரும் புலிகளின் ஆலோ சகர் அன்ரன் பாலசிங்கமும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும தற்காலிகமாக சென்னையில் வசிப்ப தற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பது.

இரண்டாவது - நோர்வேயின் ஏற் பாட்டில் இலங்கை அரசு - புலிகள் பேச்சு நடைபெறுவதற்கு இந்தியா உதவி செய்வது.

சென்னை, திருவனந்தபுரம், பெங்க ளூர் ஆகிய நகரங்களில் ஏதாவது ஒன்றில் இந்தப் பேச்சுக்கள் நடை பெறலாம் எனவும் புலிகள் பிரேரித் துள்ளனர்.

பேச்சுக்கள் இந்தியாவில் நடை பெற்றால் அதில் பங்குபற்றும் இரண்டு தரப்புப் பிரதிநிதிகளும் கொழும்பிலும வன்னியிலும் உள்ள தமது தலைவர் களை அடிக்கடி சென்று சந்தித்துக் கலந்தாலோசனை நடத்த அது வசதி யாக இருக்கும் என்றும் புலிகள் நோர்வே தரப்புக்குச் சுட்டிக்காட்டியி ருக்கின்றனர்.

இலங்கை அரசு - விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சில் இந்தப் பிரதேசத்தின் வல்லரசான இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்கு வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கின் றது என்றும் -

உத்தேச சமாதானப் பேச்சின் வெற்றி அது நடைபெறும் இடத்தி லும் தங்கியுள்ளது என்றும் - மேலும தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் பிரதேச வல்லாதிக கம், பூகோள நிலைமை, அதன் பிர தேச நலன் ஆகியவையே பேச்சுக்கு இந்தியாவின் பங்களிப்பைக் கோரும் கட்டாயத்தை ஏற்படுத்தியிருப்பதாக வும் கூறப்பட்டது. (உ-6-ரி)


**மரண அறிவித்தல்கள்**

**பாலசுப்பிரமணியம் ஸ்கந்தானந்தா**

*(ஓய்வு பெற்ற லிகிதர் - சீதுவை எண்ணெய் கொழுப்பு கூட்டுத்தாபனம், தற்போது மகாராஜா நிறுவனத்தில் பணிபுரிந்தவர்)*

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், மகாதனை தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்தவருமான பாலசுப் பிரமணியம் ஸ்கந்தானந்தா 07.01.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (முன்னாள் விதானை யார்) - பூரணம் தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சுகிர்தரத்தினம் (சின்னக்கா) அவர்களின் மருமகனும் சற்குணவதியின் அன்புக் கணவரும் அருணா, திவாகர் ஆகியோரின் தந்தையாரும் காலஞ்சென்ற விவேகானந்தா (முன்னாள் வீரகேசரி நிருபர்), சிவானந்தா (உதவி ஆணையாளர் உள்ளூராட்சி திணைக்களம், திருகோணமலை), சண்முகானந்தா, நித்தியானந்ததேவி, கணேசலிங்கம், அருளானந்த தேவி மேகநாதன் (யா/இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கணேசலிங்கம் (ஆஸ்திரேலியா), புஞ்சலிங்கம் (ஆஸ்திரேலியா), சண்முகலிங்கம் (லண்டன்), Dr.கார்த்திகேசலிங்கம் (லண்டன்), கதிர்காமலிங்கம் (ஜேர்மனி), சிவானந்தவதி (கொழும்பு), திலகவதி (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*60,பிரப்பம்குளம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(96832)
பா.சண்முகானந்தா
(சகோதரன்)

**செல்லப்பா நாகராசா**

*(இளைப்பாறிய ஓவசியர், மானிப்பாய் பிரதேச சபை)*

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பி டமாகவும் கொண்ட செல்லப்பா நாகராசா நேற்று (08.01.2002) செவ் வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் இரத்தினத்தின் அன்புக் கணவரும் வரதனின் அன்புத் தந்தையும் தங்கச்சியம்மா, நாகலிங்கம், சுப்பிரமணியம், செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, தங்கத்துரை, கனகம்மா ஆகி யோரின் அன்புச் சகோதரனும் ஜெயந்தி, சுமதி ஆகியோரின் ஆசையப்பா வும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.01.2002) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
(C/20166)
நா.வரதன் (மகன்)

# அரசு – புலிகள் பேச்சுக்களுக்கு முழு ஆதரவு வழங்கத் தயார்

## இப்படிக் கூறுகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு,ஜன.9

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு புதிய அரசுக்குத் தேவையான முழு ஆதரவையும் நாம வழங்கத் தயாராக உள்ளோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரத்னசிறி விக்கிரமநாயக்கா.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

நாட்டில் தற்போது முக்கிய பிரச்சினையாக உள்ளது இனப்பிரச்சினையே ஆகும். எனவே புதிய அரசாங்கம் இனப்பிரச்சினை விடயத்திலேயே முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

புதிய அரசாங்கத்தால் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடிய விதமாக முன்னெடுக்கப்படும் அனைத்து சமாதான முயற்சிகளுக்கும் எதிர்க்கட்சி என்ற வகையில் எமது முழுமையான ஆதரவை வழங்குவோம் - என்றார்.

இதேவேளை -

காத்மண்டுவில் நடைபெற்ற சார்க் மாநாட்டின் இறுதியில் பத்திரிகையாளரைச் சந்தித்து உரையாடிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சமாதான முயற்சிகளை நாம் ஒரு போதும சீர்குலைக்க மாட்டோம் எனவும் -

சமாதான நடவடிக்கைகளுக்கு எனது வழிகாட்டலும், ஆலோசனைகளும் தொடர்ந்து இருக்கும் எனவும் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (க-6-ரி)

# மணற்காட்டு வீதி மோசமான நிலையில்!

வடமராட்சி கிழக்கு,ஜன.9

மணற்காட்டு வீதி நீண்டகாலமாக திருத்தப்படாததால் அப்பகுதிக்கான போக்குவரத்து பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது.

அதேசமயம் கடந்த காலங்களில் இந்த வீதியின் இரு மருங்கிலும் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டதால் மழை நீர் தேங்கியும், உடைப்பெடுத்தும் வீதி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியை புனரமைக்குமாறு அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-182)

# அமைச்சர் ஜயலத்தின் இருநாள் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம்,ஜன.9

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா இருநாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

ஞாயிறு காலை வரும் அவர் பொங்கலன்று மாலை கொழும்பு திரும்புவார்.

அவர் பங்குபற்றும் நிகழ்ச்சிகள் விவரம் வருமாறு:-

**ஞாயிறு**

★ காலை 9.45 - இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனைச் சந்திக்கிறார்.

★ காலை 10.30 - அரசஅதிபர், பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோருடன் சந்திப்பு.

★ நண்பகல் 12 மணி - தொழில்நுட்பப் பூங்காவுக்கு விஜயம்.

★ பிற்பகல் 2 மணி - ஊர்காவற்துறை சின்னமடு தேவாலயம்.

★ பிற்பகல் 3.30 மணி - யாழ். நூலகம்.

★ மாலை 4.15 மணி - யாழ். நாக விகாரை.

★ மாலை 5 மணி - யாழ்.தேவாலயம்.

★ மாலை 5.30 மணி - மனித நடுநிலைய தொழில் நிலையம்.

★ மாலை 6.15 மணி - யாழ். ஆயரைச் சந்தித்தல்.

★ இரவு 7 மணி - தென்னிந்திய திருச்சபை தலைவர்களைச் சந்தித்தல்.

★ இரவு 7.30 மணி - சர்வதேச அரச சார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்தல்.

**திங்கள்**

★ காலை 8 மணி - நல்லூர் கந்தசுவாமி ஆலய பொங்கல் விழாவில் பங்குபற்றுதல்.

★ காலை 9.30 மணி - நல்லை ஆதினம்.

★ முற்பகல் 10.30 மணி - பருத்தித்துறை துறைமுகத்தைப் பார்வையிடல்.

★ முற்பகல் 11.15 மணி - பருத்தித்துறை மீனவர் சங்கப் பிரதிநிதிகளை ஹாட்லிக் கல்லூரியில் சந்திப்பார்.

★ பிற்பகல் 2 மணி - கைதடிப் பகுதிக்கு விஜயம்.

★ பிற்பகல் 3.30 மணி - யாழ்பல்கலைக்கழகத்துக்கு விஜயம்.

★ மாலை 4.30 மணி - கொழும்பு திரும்புவார் (க-3)


A/L 2004
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி-12
சனி - 8மணி
DMI
(C/19073) யாழ்நகர்

கணக்கீடு
A/L 2003
சொத்து விற்பனை
ஆசிரியர்: S.தவா
B.Com.(Hons)[Acc.Spl]
ஆரம்பம்:- நாளை 4.p.m.
வழமையான நேரம்
செவ்.,வியாழன் 4.p.m.
SHAMROCK
Temple Road, Jaffna. (C/20166)

இதோ வந்துவிட்டது
புதிய ரக CBZ
HERO HONDA
PASSION
ASPIRE
CALIBER
MD 90, லான்சர் C 90,
லான்சர் C 50,
லான்சர் C 70,
நியூமொடல் சாளி
மற்றும்
KUBOTA JAPAN
லான்மாஸ்டர்
T.P. 2544 (96881)
யசோ
மோட்டேர்ஸ்
அன் ஹாட்வெயர்

கணக்கீடு A/L - Day Class
ஆசிரியர்:- S.தவா
B.Com. (Hons)(Acc.Spl.)
கிரயக் கணக்கீடு
ஆரம்பம்:- நாளை 1மணி
வழமையான நேரம்
செவ்., வியா. 1மணி
ஆசிரியர் தவாவின் 2002ஆம் ஆண்டின், மாணவர்களுக்கான எதிர்பார்ப்பை நிறைவேற்றும் புதிய வெளியீடு என்ன?
நாளை உதயன் வெளிவரும் வரை பொறுத்திருங்கள்!
NEW SCIENCE COLLEGE JAFFNA

வடமராட்சி கண்ட பிரமாண்டம் மீண்டும் யாழ்.மண்ணில்
தைப்பொங்கலை முன்னிட்டு...
யாழ்.பல்கலைக்கழக, இராமநாதன் நுண்கலைத் துறையினர் பிரமாண்டமாக வழங்கும்
மதுரகானங்கள்
(பிரமாண்டமான இன்னிசை விருந்து)
(இரு காட்சிகளாக்கப்படவேண்டும் என்னும் பலரது வேண்டுகோளுக்கிணங்கவும், தைத்திருநாளில் இரு காட்சிகளை வழங்குவதில் ஏற்படும் காலச்சிரமங்களின் காரணத்தாலும் ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க முன்னைய நாளான 13.01.2002 இல் மதுரகானங்கள் மலரும்)
காணத்தவறாதீர்! (96878)

A/L 2004
கலை, வர்த்தக
வகுப்புகள்
ஆரம்பம்:-
12.01.2002
காலை 7.30மணி. (96872)
ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்.

பொருளியற் கல்லூரி
(இரு இடங்களில்)
2004 A/L கலை - வர்த்தகம்
ஆரம்பம்: 12.01.2002 சனி
யாழ்நகரில்: 9.00 a.m.
இணுவிலில்: 3.00 p.m.

| யாழ்ப்பாணம் | பாடம் | இணுவில் |
|---|---|---|
| வரதராஜன் | பொருளியல் | வரதராஜன் |
| முகுந்தன் | கணக்கீடு | முகுந்தன் |
| முரளி | வணிகக்கல்வி | முரளி |
| R.P.சர்மா | அளவையியல் | R.P.சர்மா |
| மீரா | தமிழ் | பாலா |
| ஜோதீஸ்வரன் | இந்துநாகரிகம் | சுரேஸ் |
| வசந்தன் | கிறிஸ்தவம் | வசந்தன் |
| குமரன் | புவியியல் | குமரன் |
| தரன் | இந்துசமயம் | தரன் |
| சுகந்தன் | நாடக - அரங்கியல் | சுதன் |
| இராஜேஸ்வரன் | ஆங்கிலம் | இராஜேஸ்வரன் |

(96831)

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
100 Clock Tower Road, Jaffna
O/L
பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்காக
விசேட கணனிப் பயிற்சி
குறுகிய காலத்தில் ! குறைந்த கட்டணத்தில் !! சிறந்த பயிற்சி நெறி !!!
ஆரம்பம் : 19.01.2002 பகல் 10மணி
பெற்றோர்களே ! உங்கள் செல்வங்கள் O/L பரீட்சை முடித்து பெறுபேறுகளிற்காக காத்திருக்கிறார்களா? அவர்கள் இக்காலத்தை பயனுள்ளதாக்கி கொள்வதற்காக விசேட கணனிக் கற்கை நெறி ஒன்றை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

JAFFNA TECHNICAL INSTITUTE
JAFFNA, SRI LANKA.
Regd No.15251 T.P.:3335
தொழிற் பயிற்சிகள்
வேலைவாய்ப்பினை நாடி வெளிநாடு செல்வோருக்கான ஓர் அரிய சந்தர்ப்பம்!
> RADIO,T.V.andVIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ, ரீ.வீ., வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் Computer Monitor, UPS, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் 10 மாதங்கள்.
> MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன மோட்டார் (F)பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின் இணைப்பு Three phase இணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப்படும்.
காலம் 7 மாதங்கள்.
> MOTOR CYCLE MECHANISM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் 5 மாதங்கள்.
> AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர்ச்சாதனப்பெட்டி மற்றும் எயர் கொன்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் 6 மாதங்கள்.
> CITY and GUILDS of LONDON EXAM
(1) POWER (2) ELECTRONICS
புதிய பயிற்சிகள் ஆரம்பம்
15.01.2002 (கிழமை நாள்களில்)
19.01.2002 (சனி, ஞாயிறு நாள்களில்)
மேலதிக விவரங்களுக்கு நேரில்
"கடந்த 22வருடங்களாக யாழ். மண்ணில் பல்லாயிரம் தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்கிய ஒரே நிறுவனம்"
266/01, Stanley Road, Jaffna. (றெயில்வே கடவை அருகில்)
No.07,Palaly Road, Jaffna. (இலுப்பையடிச் சந்தி அருகில்)
- DIRECTOR.
(C/20157)

சீமெந்து விற்பனை
ஓரிரு தினங்களில் மிற்சுயி (Mitsui), அட்லஸ் (Atlas) சீமெந்துகள் வரவிருப்பதால் வாடிக்கையாளர்கள் அனைவரையும் ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
தொடர்பு:
ஜெசியா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2407 (C/20131) FAX: 2140

UNIVAC
College of Computer Information Technology
O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிற்கு குறுகிய கால விசேட கணனிப் பயிற்சிநெறி ஒன்றினை எமது நிறுவனம் வழங்குகின்றது. மாணவர்கள் 12.01.2002ஆம் திகதி 10 மணிக்கு பயிற்சிநெறியில் இணைந்துகொள்ளவும். பயிற்சிக் கட்டணம் 1000/= மட்டுமே.
(1201, K.K.S. Road, Jaffna,/Atchuvely) (96838) - Director.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.